பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்றோட், யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு வார மலர்.

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 258
பராபவ ஐப்பசி 12 றஜப் 13 (28-10-66) வெள்ளிக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
10 சதம் கட்டி
வாங்கி அதிகலாபம்
அடையுங்கள்

அரசியல் நெருக்கடி ஏற்பட்டாலும்

# போதனு மொழியில் விட்டுக் கொடுப்பதா?

## கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி "தாய்மொழிதான் போதனுமொழியாக இருக்கவேண்டும். இதனுல் அரசியல் நெருக்கடி ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்ன நெருக்கடி வந்தாலும் ஒரு அங்குலம் கூட விட்டுக் கொடுக்கமாட்டோம்"

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற வெள்ளை அறிக்கை பற்றியகருத்தரங்கில் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

அகிலஇலங்கை அரசினர் பாடசாலைத்தமிழர் ஆசிரியர் சங்க வடபிரதேசக்கிளையின் சார்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கு திரு ஐ. ஆர். ராமசுவாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:—

(12-ம் பக்கம் பார்க்க)

## உபதேர்தல் முடிவு
## ஆட்சேபமனு

கொழும்பு, வியாழன் பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டி ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட மூன்று அபேட்சகர்களுக்கும் எதிராக தேர்தல் ஆட்சேப மனுக்கள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. இத்தகவலை ஐக்கியதேசியக்கட்சிப் பத்திரிகையான 'சியாரட்ட' தெரிவிக்கிறது.

இதேசமயம்தேர்தல் ஆட்சேப மனு விசாரணையின் பின் அளிக்கப்பட்டதீர்ப்பை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட எட்டுவழக்குகள் அப்பீல் விசாரணையை எதிர் நோக்கியிருக்கின்றன.

தொடங்கஸ்லந்தைத் தொகுதி தேர்தல் ஆட்சேப மனுமீதான அப்பீல் விசாரணை முடிவடைந்துவிட்டது. அதன் தீர்ப்பை அடுத்து அங்கு விரைவில் உபதேர்தல் ஒன்று நடைபெறவிருக்கிறது

டெடிகமைத் தேர்தல் தீர்ப்பை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் விசாரணை நவம்பர் மாதம் முதல் திகதி எடுக்கப்படவிருக்கிறது.

## தாய்மொழியே தேவை திரு. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், வெள்ளி 'உலகத்தில் உள்ள கல்வி நிபுணர்கள் தாய்மொழி மூலம் கல்விஊட்டுவதுதான் சரியான கல்விவிதியென்றுல், அதற்கு இந்த நாட்டில் மட்டும் விதிவிலக்கு இருக்கக் கூடாது. இலங்கையைப் பொறுத்த வரையில், கட்டாயமாக தாய்மொழிதான் போதனு மொழியாக இருக்க வேண்டும். இன்றுள்ள அரசியல், கல்வி சூழ்நிலையில் நம் கொஞ்சமும் விட்டுக்கொடுக்கக் கூடாது. பெற்றேர் விருப்பம் எதுவானுலும் சரி தாய்மொழி தான் போதனு மொழியாக இருக்கவேண்டும்'

வெள்ளையறிக்கை பற்றிய கருத்தரங்கில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினுர் அவர் மேலும் கூறியதாவது:

பெற்றேர் விருப்பத்திற்கு அவரின் பிள்ளையைபோதிக்க மறுக்கும் வெள்ளை அறிக்கை, போதனுமொழி விஷயத்தில் மட்டும் எதற்காகப் பெற்றேர் விருப்பத்தை ஏற்கிறது. தன்மகனுக்கு விஞ்ஞானம் போதிக்க வேண்டும் எனப்பெற்றேர்விரும்பினுல் அதற்கு வசதியளிக்கப்படவில்லை. எல்லாப் பெற்றேரும், தம் மக்கள், விஞ்ஞானம் படிக்கவேண்டும், சர்வகலாசாலைக்குச்செல்லவேண்டும் [illegible]ப்பதையே விரும்புவர். [illegible] பிரிப்பதன் மூலம் இதற்கு[illegible] முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது.

### தமிழர் எவரும் இல்லையே

விஞ்ஞானப் பாடக்குழுவில் தமிழர் எவரும் இல்லை. அப்படியானுல் தமிழ்ப் பிள்ளைகளுக்கு எப்படிவிஞ்ஞான பாடம் தயாரிக்க முடியும். ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உள்ளதை தமிழ் மொழிபெயர்க்கப்போகிறீர்களா? பாடத்திட்டக் குழுவில் இவ்வருடம் தமிழர் எவரும நியமிக்கப்படவில்லை பாடத்திட்டம் அமைக்கப்படும்போது, தமிழ் மாணவர் பாதிக்கப்படுவார்கள்.

தரம்பிரிப்பதன் முக்கிய காரணம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதே என்கிறுர்கள். தரம்பிரித்துவிட்டால் விவசாயத் தொழில்துறையில் அரசாங்கம் வேலை வசதி செய்து கொடுக்குமா? தொழில் நிலை

(12-ம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்பில் குடிதண்ணீர்த் திட்டம்
### நவ. 2-ல் உள்ளூராட்சி அமைச்சர் ஆரம்பித்துவைப்பார்

கொழும்பு, வியாழன் பட்டிருப்புத் தொகுதியில் சுமார் பதினையாயிரம் மக்களுக்கு நன்மையளிக்கும் குடிதண்ணீர்த் திட்டம் ஒன்றை நவம்பர் மாதம் 2-ம் திகதி உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ஆரம்பித்து வைப்பார்.

துறைநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நாற்பிட்டிமுனை ஆகிய இடங்களிலுள்ள பதினையாயிரம் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னையை இத்திட்டம் நீக்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தண்ணீர் விநியோக நிலையம் ஒன்று துறைநீலாவணையிலும் மற்றென்று சேனைக்குடியிருப்பிலும் அமைக்கப்படவிருக்கிறது.

### மதிய உணவு வழங்குமாறு கோரிக்கை

கொஸ்லாந்தை, வியாழன் "தோட்டப் பாடசாலைக் குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்படவேண்டும். அரசாங்கப் பாடசாலைகளில் பால், பணிஸ் வழங்கப்படுவதுபோல, தோட்டக் குழந்தைகளுக்கும் வழங்கப்படவேண்டும்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உபதலைவரும் நியமன எம். பி.யுமான திரு. வி. அண்ணாமலை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லைக்கு எழுதிய கடிதமொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## "மலையகக் குழந்தைகளின் போதனுமொழி தமிழ்தான்"

கொஸ்லாந்தை, வியாழன் மலையகக் கல்வி விஷயத்திலோ, ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்த விஷயத்திலோ தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கை மாறவேயில்லை. அன்றையக் கொள்கையையே இன்றும் தமிழரசுக் கட்சி கொண்டுள்ளது. தமிழர்களைப் பிரித்து நாம் ஒன்றும் பேசுவதேயில்லை. இலங்கையில் வாழும் தமிழர்கள் ஒரே இனத்தவர்கள் என்றே தமிழரசுக் கட்சி கருதி வருகின்றது.

இவ்வாறு அட்டன் பசுமலையில் நடைபெற்ற கூட்டங்களின்போது பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சிச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு. அமிர்தலிங்கம் கூறினுர்.

## சந்தேக நபர் கைதானுர்

முல்லைத்தீவு, சனி நெடுங்கேணிப் பிரிவைச் சேர்ந்த கருவேலன் கண்டல் என்ற இடத்தைச் சேர்ந்த மருதன் தம்பிராசா என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மயில்வாகனம் என்பவர் துப்பாக்கியினுல் சுட்டுக் காயம் விளைவித்ததாக முல்லைத்தீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸார் சந்தேக நபரான சின்னத்தம்பி மயில்வாகனத்தை துப்பாக்கியுடன் கைது செய்துள்ளனர்.

சூடு பட்டுக் காயமடைந்தவரான மருதன் தம்பிராசா முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்பு உடனடியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

தொடர்ந்து பொலிஸார் [illegible]

## சலூன்களில் பாகுபாடு நீங்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதும், அதைக் கடைப்பிடிப்பதும், பிறப்பின் பேரால ஒரு சாரார் சகல மனித உரிமைகளைப் பூரணமாக அனுபவிப்பதும் இன்னெரு சாரார் மனித அடிப்படையில் ஒன்றைத்தானும் அனுபவியாமல் இருப்பதும் மிக மிகக் காட்டுமிராண்டித்தனமானது. சாதிப்பாகுபாட்டை ஒழித்துக் கட்டுவதே இன்று தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும் தலையாய கடமை என்று நமது சங்கம் கருதுகிறது. இதையொட்டி நமது சகல தொழில்செய்யும்சிகையலங்கரிப்பு நிலையங்களிலும் மனித உரிமையை மதித்து எல்லோருக்கும் கடமை செய்வோம் எனவும் யாரையுமே புறக்கணிக்க மாட்டோமென்றும் கோரும் தீர்மானமொன்று வட இலங்கைச் சிகை அலங்கரிப்பாளர் சங்க ஆண்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது இத்தீர்மானப்பிரதிகள் இரு பான்மைத் தமிழர் முன்னணித்தலைவர், செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. திரு. க. இராசையா தலைமையில் யாழ்ப்பாணம் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றபோது க. இராசையா மீண்டும் தலைவராகவும், டொமினிக் ஜீவா செயலாளராகவும், ச. இராசையா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். 7 பேர்களைக் கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி

## தேர்தல் தோல்விக்குக் காரணம் என்ன?

— நமது அரசியல் நிருபர் —

தமிழரசுக் கட்சிதான் இடைத்தேர்தல்களிலே ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்று அரசாங்கக்கட்சியிலே சிலர் கருதுவதாக 'டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதைப்படித்ததும் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்ற கதைதான் ஞாபகம் வருகிறது.

தேர்தல் பிரசாரங்கள் மூன்று தொகுதிகளிலும் தீவிரமாக நடந்துகொண்டிருக்கையில், தமிழரசுக்கட்சியினர் தங்கள் கோரிக்கைகளை பிரதமரிடம் சமர்ப்பித்தனரென்றும் நீண்ட அறிக்கைகளை வெளியிட்டனரென்றும் இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த செல்வாக்கு குறைந்துவிட்டதென்றும் அரசாங்கக்கட்சியில் சில மெம்பர்கள் கருதுவதாகவும், இத்தோல்வியைக் குறித்து ஆராய ஒரு கூட்டத்தை விரைவில்கூட்டுமாறு அவர்கள் கேட்டுள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது. அதாவது, தேசிய அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு மாறாகவே இத்தேர்தல் தீர்ப்பு கிடைத்துள்ளதென்று எதிர்க்கட்சித்தலைவர் ஸ்ரீமா பண்டாரநாயகா கூறுவதை இவர்களும் ஆதரிக்கிறார்களென்றே ஏற்படுகின்றது.

தேசிய அரசாங்கத்தினரிடையே பிளவுகளை ஏற்படுத்தி, அதைச் சிதைக்க வேண்டுமென்பதே எதிர்க்கட்சியின் நோக்கமென்பது பகிரங்க ரகசியம். தமிழரசுக் கட்சியை தேசிய அரசாங்கத்திலிருந்து விலக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் "மித்ரபேதம்" செய்யும் முயற்சியே இது என்பதை சிறப்பாக தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் உணர்ந்து நிதானமாகக் காரியங்கள் செய்யவேண்டும்.

ஃ ஃ ஃ

தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ்ப்பிரதிநிதிகளையும் ஐ.தே. கட்சியின் சார்பாகப் பேச அனுமதித்திருப்பின் பலவிதங்களிலும் அது பயனளித்திருக்கும். தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்திருந்தால் சிங்கள வாக்குகளை தாங்கள் இழக்கநேரிடுமென்று பிரதமர் உள்ளிட்டு சிலர் கருதியிருப்பின் அது பெரும் தவறாகும். சிங்களப் பொதுமக்கள் வகுப்புவாதிகளல்ல. சென்ற பொதுத் தேர்தலிலே அவர்கள் பன்முறையும் காட்டியுள்ளனர். தமிழர்கள் நிலைமையை சிங்களப் பொதுமக்களுக்கு எடுத்து விளக்கி, தேசியஒற்றுமையைப் பலப்படுத்ததமிழர் கங்கணங்கட்டிக்கொண்டுள்ளதையும் எடுத்துக் கூறியிருந்தால் தமிழரைப் பற்றி அப்பகுதிகளில் நிலவும் பல தப்பபிப்பிராயங்கள் நீங்கியிருக்கும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை தேசிய அரசாங்கம் இழந்துவிட்டது வருந்தத்தக்கது. தப்பெண்ணத்தைநீக்காவிடினும் அவை அதிகரிக்கக் கூடியவகையில் காரியங்கள் செய்யாமலாவது இருக்க வேண்டும். ஆனால் தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த எம்.பி.க்களில் சிலர் தமிழ்ப் பிரதிநிதிகள்மீது பழி போடுவதாயின், அது எதிர்க்கட்சியினருக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதுடன், அவர்களது அரசியல் நோக்கமும் கைகூடுவதாகும். இதற்குப் பிரதமர் சற்றும் இடம் கொடுக்கக்கூடாது.

ஃ ஃ ஃ

ஐ.தே. கட்சியின் இத்தேர்தல் தோல்விக்கு உண்மைக் காரணமென்ன? மொழிப் பிரச்னையா, தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகளா அல்லது வேறு காரணங்களா? ஐ.தே. கட்சியாருக்கு சென்ற பொதுத் தேர்தலில் கிடைத்தவாக்குகளை விட அதிகமானவாக்குகள் இடைத்தேர்தலில் கிடைத்துள்ளன. இதிலிருந்து தெரிவதென்ன? மொழிக் கொள்கையையும், தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் அவர்கள் ஆதரிக்கின்றனர் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சியென்ன தேவை? தமிழ்ப்பிரதிநிதிகளைத் தூற்றுவதால் யாரும் தேசாபிமானியாகிவிட முடியாது. சிங்களப் பொதுமக்களையும் இதைக்கொண்டு ஏமாற்றிவிட முடியாது.

ஃ ஃ ஃ

பின், சுதந்திரக்கட்சியின் வெற்றிக்கு என்னகாரணம்? தொடம்பே முதலாளியின் மரணம் எதிர்க்கட்சியினருக்கு சமய சஞ்சீவியாகக் கிடைத்துவிட்டவே அதை அவர்கள் நன்குபயன்படுத்திக்கொண்டு விட்டார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

பார்லிமெண்ட் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதிக்க சபைத்தலைவர் அனுமதி மறுத்ததும் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொண்டுவந்து, அதைவிவாதிக்கும்வரை பார்லிமெண்ட் கூட்டத்துக்குத் தொடர்ந்து செல்லுவதில்லை என்று கூறி அதைப் பகிஷ்காரம் செய்தனர். இதைப்பற்றி இந்த இடைத்தேர்தல் கூட்டங்களில் தீவிர பிரசாரங்கள் செய்யப்பட்டன. வெறும் வாயை மெல்பவனுக்கு அவல் கிடைத்தது. தேர்தலில் தங்கள் நோக்கம் கைகூடிவிட்டதால், நவம்பர்மாதம் 6-ம் திகதி பார்லிமெண்ட் கூட்டத்துக்கு மூன்று புதிய அங்கத்தவர்களுடன் செல்லுவதென்று சுதந்திரக் கட்சியினர் தீர்மானித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகின்றது.

அவர்கள் பார்லிமெண்ட் கூட்ட பகிஷ்காரத்தை நிறுத்துவது வரவேற்கத்தக்கதே. இடைத் தேர்தலில் தொடம்பே முதலாளியின் மரணத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டதும் இயற்கையே. எந்த அரசியல் கட்சியும் இவ்வித சந்தர்ப்பத்தை நழுவவிடாது. ஆனால் மக்களின் உணர்ச்சி வேகங்களை இதனால் தட்டியெழுப்பி சில அதிகப்படி வாக்குகளால் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவர்கள், தங்கள் வெற்றிக்கு வேறு ஏதேதோ காரணங்கள் கூறி, ஏற்கெனவே உரிமைகளை இழந்து திகைத்துக் கொண்டிருக்கும் தமிழர்கள்மீது மேலும் பழி போடுவது அரசியல் நேர்மையோ, நாட்டுக்கு நன்மையோ ஆகாது. இதற்கு மாறாக, வகுப்புத் துவேஷங்கள் அதிகரிக்கவும் தேசிய ஒற்றுமை சிதைந்து மீண்டும் நாட்டில் அமைதி குலையவும் கூடும். தேசாபிமானிகள் யாரும் இதற்கு எக்காரணம்பற்றியும் இடமளிக்க முடியாது.

ஃ ஃ ஃ

தோல்வி ஏற்பட்ட நேரத்தில் யார்மீது இப்பழியைப் போடலாமென்று நினைத்து, தவறான முடிவுகளை பிரதமமந்திரி செய்துவிடக்கூடாது. இன்று தேசிய அரசாங்கம் உருவாகி நடந்து வருகிறதென்றால் அதற்கு முக்கிய காரணம் தமிழ்ப்பிரதிநிதிகளே. தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப் பெற முடிந்தது பிரதமரின் பெரிய வெற்றி. இதுதான் அவரது பெரிய அரசியல் சாதனை. இதில் தான் நாட்டின் எதிர்கால முன்னேற்றமும் சமூக ஒற்றுமையும் தங்கி இருக்கின்றதென்பதை அரசியல் அனுபவம்மிக்க அவர் அறிந்திருப்பார். தமிழ்ப் பிரதிநிதிகளுடைய நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் எக்காரணம் பற்றியும் இழப்பின், தேசிய [illegible] முடிவடைவதாக இருக்கும்.

அரசியல் வட்டாரங்களிலே ஓர் வதந்தி உலவுகின்றது. அது எவ்வளவு தூரம் ஆதாரமுள்ளதோ தெரியாது. சுதந்திரக் கட்சியினருக்கும் சிறப்பாகத் தலைவர் ஸ்ரீமாவுக்கும் மற்றும் அதில் சில முக்கியஸ்தர்களுக்கும் இடதுசாரிக் கட்சிகளின் தொடர்பு அவ்வளவாக மகிழ்ச்சியளிக்கவில்லையாம். அரசியல் அவசியம் காரணமாகவே அவர்களுடன் நட்புக்கொள்ள வேண்டி ஏற்பட்டதென்றும் முடியுமானால் அவர்களது தொடர்பை விட்டுவிட்டு ஐ.தே. கட்சியுடன் ஒத்துழைக்கலாமென்று அவர்களில் சிலரிடையே ஆவல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதேசமயம் ஐக்கிய தேசியக்கட்சியிலும் சிலருக்குத் தமிழரசுக்கட்சியின் தொடர்பு மகிழ்ச்சியளிக்கவில்லை என்றும் கூடுமானால் அவர்களை விட்டுவிட்டு, சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்தைநடத்தலாமென்றும் எண்ணம் இருப்பதாகவும் அவ்வதந்திகள் கூறுகின்றன. இவ்வதந்திகளில் ஏதும் உண்மையிருப்பின், மீண்டும் நாட்டில் வகுப்புவாதம் தாண்டவமாடி, சிறப்பாகத் தமிழர் நிலை மிகவும் மோசமாகி, பழைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படக்கூடும். பழைய அனுபவங்களை நன்குணர்ந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா இதற்கு சற்றும் இடமளிக்க மாட்டாரென்றே நம்புவோம்.

ஃ ஃ ஃ

இதேசமயம் தமிழ்பேசும் மக்களுக்கு இது பெரிய சோதனைக்காலம். தமிழ் பேசும் மக்கள், முஸ்லிம்கள் என்றும் மலைநாட்டுத்தமிழர் என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர். கட்சியாலும் அவர்கள் பிளவுபட்டுப் பலவீனமடைந்துள்ளனர். தமிழரசுக்கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸ்கட்சிக்கும் என்ன வேற்றுமைகள் இருப்பினும் தமிழரின் உரிமை பற்றியும் தன்மானத்தைக் காப்பது குறித்தும், எதிர்கால நல்விஷயமாகவும் வேற்றுமை இருக்கமுடியாது. முன் ஒரு சமயம் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பார்லிமென்டில் பேசுகையில் நாட்டின் எல்லாத் தீங்குகளுக்கும் பழியைத் தமிழரசுக்கட்சிமீது போடுவதைத் தாம் நம்ப முடியாதென்று பகிரங்கமாகச் சொன்னார். தமிழருக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் பெரிய சோதனை ஏற்பட்டுள்ள இந்நேரத்தில், இரு தமிழ்க்கட்சித் தலைவர்களும் சேர்ந்து, தமிழரின் நல்வாழ்வையும் மானத்தையும் காக்கக்கூடியதற்கான வழிவகைகளைச் செய்யப் பெரிய மனதுடனும் அரசியல் தீர்க்கதரிசனத்துடனும் முன்வரவேண்டும். இப்போது தமிழ்த் தலைவர்களுக்குள்ளாகப் பிளவுகள் நீங்குவதே தமிழரின் எதிர்காலத்துக்கும் நாட்டின் நன்மைக்கும் மிகவும் தேவையாகும். தமிழ்பேசும் மக்களுக்கும் புதிய நம்பிக்கை ஏற்படுவதாக இருக்கும்.


மாணவர்களுக்கோர் வரப்பிரசாதம்

க. பொ. த. பரீட்சை

1959—1963

வருடங்களின் வினாத்தாள்கள் முற்றிலும் அடங்கியது.

**கணக்கியல் வினா விடை**

**(ACCOUNTS)**

விலை: ரூபா 4-80. தபாற் செலவு: ரூபா 1-20.

ரூபா 6/- மணி ஓடர் (M. O.) அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

:கிடைக்குமிடம்:

**வர்த்தகக் கலாசாலை**

230, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


## இலங்கையா? இந்தியாவா?

### தீர்க்கமான முடிவுக்கு வருமாறு தோட்டத்தொழிலாளருக்கு கோரிக்கை

கொஸ்லாந்தை, வியா.

"இந்தியாவிற்குச் செல்வதா அல்லது இலங்கையிலேயே தங்கிவிடுவதா என்பதை இப்போதே தீர்மானித்துவிடுங்கள். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் அதிக சிரமமின்றி இந்தியாவுக்குச் செல்லவோ அல்லது இலங்கைப் பிரஜையாகிக் கொள்ளவோ முடியும். எனவே இன்னும் சில வாரங்களுக்குள் தங்கள் தீர்மானத்தை ஒரு நிலைப்படுத்த வேண்டும்."

இவ்வாறு நாவலப்பிட்டியில் நடைபெற்ற இ.தொ.கா.மாதர்கள், தலைவர்கள், கமிட்டித்தலைவர்கள் கூட்டத்தில் நாவலப்பிட்டி மாவட்டப்பிரதிநிதி திரு. சந்தோஷம் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இ. தொ. கா. இலங்கையில் தங்குபவர்களுக்கும் இந்தியா செல்பவர்களுக்கும் சகல வசதிகளையும் செய்துகொடுக்கவிருக்கிறது. இது தொழிலாளர்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய முக்கிய விஷயம். எனவே எதுவித கட்டாயமும் இல்லாமல் தாங்களாகவே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றார்.

### புதிய கயிற்று நூல் தொழிற்சாலை

கொழும்பு, வியா.

உள்நாட்டுக் கயிற்றுநார் கைத்தொழில் ஓரளவு இயந்திரசாதனத்தைப் புகுத்த, சிறு கைத்தொழில், கிராமாபிவிருத்தி இலாகா ஆலோசித்துள்ளது.

செலவுகளைக் குறைக்கவும் அதேநேரத்தில் உற்பத்திப் பொருளின் தகைமையை உயர்த்தவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

தெங்காய்மட்டையைபதப்படுத்தும் ஆரம்பத்தொழிற்சாலையொன்று லோகலவில் நிறுவப்பட இருக்கிறது. இத்தொழிற்சாலை நிறுவ 2 லட்சம் ரூபா செலவாகும்.

உள்ளூர்த் தேவைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் கயிற்றுப்பாய் உற்பத்தி செய்வதற்கென நவீன தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இறுதைத்தொழில் இலாகா தீர்மானித்துள்ளது. இத்தொழிற்சாலை, ஓர் மேற்கு ஜெர்மன் ஸ்தாபனத்துடன் கூட்டாக நிறுவப்படும். இதற்கான கயிற்றுநூல், கிராமக் கயிற்றுநூல் நூற்பவரிடம் உறுதியான விலைக்கு வாங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் திருவருள் நெறி

இறைவனது திருவருள் நெறியின் இயல்பை இலகுவாக விளக்குவதாயின், சைவசமயிகள் மாத்திரமல்ல, சைவம் முதலாகச் சொல்லப்படும் அகச்சமயிகள் மாத்திரமல்ல, புறச்சமயிகள், புறப்புறச்சமயிகள், ஒருசமயத்தையும் ஏற்காதவர்ஏன் விலங்கு, பறவை, தாவரம்முதலானஎந்தச்சீவராசியானாலும் யாவரும், யாவும் பரம்பொருளாம் இறைவனது திருவருளைப் படிப்படியாகப்பெற்றுடய்தியடைகின்றனர் எனலாம். அகிலத்தையும்அருள்நெறிப் படுத்துவது பரப்பிரம்மஸ்வரூபம்.

பரப்பிரம்மஸ்வரூபம் என்னும்போது படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழில்களையும் இயற்றுது இயற்றுவித்த சிவசக்தி பேதமற விளங்கும் பரம்பொருளையேகுறிக்கும். இதனை, சிவஞானசித்தியார், சுபக்கம் 2-ம் சூத்திரம் 25-ஆம் பாடல்

''யாதொரு தெய்வங்
கொண்டீர் அத்தெய்வ
மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம்
வருவர் மற்றத்
தெய்வங்கள்
வேதனைப்படும் பிறக்கும்
இறக்கும் மேல்வினையுஞ்
செய்யும்
ஆதலால் இவையிலாதான்
அறிந்தருள் செய்வ
னன்றே''

என விளக்குவதிலிருந்து தெளியலாகும்.

அப்பரம் பொருளின் இயல்பை, அவர் ஆன்மாக்களுக்கு அருள் செய்யுந் திறத்தை, அதன் காரணத்தைத் திட்டமாக எடுத்துக்

**க. வை. ஆ. சர்மா**

கூற எவராலும் இயலாது. இதசூரபன்மனுகிய அண்ணனுக்கு அவன் தம்பி சிங்கமுகாசுரன் மந்திராலோசனையிற் கூறியது.

''அருவும் ஆகுவன்,
உருவும் ஆகுவன்,
அருவும்
உருவும் இல்லதோர்
தன்மையும் ஆகுவன்,
ஊழின்
கருமம் ஆகுவன், நிமித்த
மும் ஆகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே
பகர்ந்திடற் பாலார்''

மேலும் கூறுகின்றான். அவ்விறைவன், இருக்கு, யசுர், சாமம், அதர்வம் எனநான்காக வகுக்கப்பட்ட விரிந்த வேதங்களாலும் பலபடச் சொல்லியும்காட்டமுடியாத பெருமையுடையவன் வேதசாரமான உபநிடதங்களின் முடிவிலே தோன்றும் ஞானக் காட்சிக்கும் எட்டாதவன், தனக்குப் பின் தோன்றிய யாக்கையுடையார் எல்லாரும் மூப்பவும், தான் நிலைபெற்றஇளமையுடையவன், ஆதலின் எல்லார்க்கும் புதியன் — எல்லார்யாக்கைக்கு முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடையவன், ஆதலின் எல்லார்க்கும் தான் பழையன், உலகத்திற்குப் பின்னும், அதற்கு முன்னுமாகி உள்ளவன், ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாகஉள்ளவன், மலமென்பதே இல்லாத தூயவன் என்ற கருத்தில்—

''வேதக்காட்சிக்கும்
உபநிடத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்கும்
காணலன், புதியரிற்புதியன்,
மூதக் காரிக்கு மூதக்கவன்,
முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய்
உயிர்க்குயிராய் நின்ற
அமலன்''

என்றும், பின்னரும்சிங்கன் கூறுகின்றான், ''அண்ணா! ஞானமே உருவான நாயகனைப் பற்றி, அற்பதர்களாகிய நானும் நீயுமா பேசிஒரு முடிவு காணவல்லேம்? மௌனவிரதமேபூண்டுமாதவத்தில் நிலைத்திருக்கும் முனிவரர்தாமும், அதிகம் ஏன், அப்பரம்பொருள் தானுமே தன்னுடைய நிறைவுத்தன்மை முழுவதையும் இன்னமும் அறியார் என்றால்,

''ஞானந்தான் உருவாகிய
நாயகன் இயல்பை
யானும்நீயு மாய்இசைத்தும்
என்றால் அஃதெளிதோ?
மோனந்தீர் கலாமுனி
வருந்தேற்றிலர் முழுதும்
தானுங்காண் கிலன் இன்
னமுந்தன் பெருந்தன்மை.''

இப்படி எவ்வளவோ நல்ல யோசனைகளைச் சிங்கமுகன் மந்திராலோசனையிற் கூறியபோதும், அவற்றை ஏற்றுக் கொள்ளாத சூரபதுமன், பரம்பொருளாம் இறைவனுடன் போர்செய்து தன் சுற்றத்தவர், புத்திரர் யாவரையும் இழந்தநிலையில், கடைசியாக எஞ்சியிருந்த ஒரே தம்பியாகிய சிங்கனை அழைத்துப் போர் புரிய ஏவுகிறான். அப்போது சிங்கன் கூறுகி [illegible] [illegible] னமும் உணர்ந்தாயல்லை,

விதியை வென்றவர் யாருளர்? சுப்பிரம் ஹண்ணியம்-மேலான நல்ல பரப்பிரம்மஸ்வரூபம். அப்பரம்பொருளின் திருவருள் நெறிமுறை என்னைச் சமீபித்துவிட்டது. அதனால், யான் அப்பிரானிடம் (போர் புரியும் பாணியில்) போகிறேன். அடுத்தபடியாக, அந்த நல்ல பேறு உனக்கும் கிடைக்கும் என்னும் உறுதியுடையேன்: உன் புத்தியும் அந்த விதிவழியே தான் செல்கிறது. அண்ணா! நீ நினைத்தபடி செய்வாயாக'' இதுவே சிங்கன் தன் தமையனிடம் கூறிய இறுதி வாக்கு. அது-

''மூலமும் முடிவும்
இல்லா மூர்த்தியைப்
பாலன் என்றெண்ணினை
படுவ(து) ஓர்ந்திலை
ஆலம தாவதே
ஐய என்மொழி
மேலையின் விதியை
யார் வெல்லும் நீரினர்'' —

என்றும்,

''கந்தனும் ஒருவனைக்
கடக்கப் பெற்றிடின்
வந்துனைக் காண்பனுல்
மற்ற(து) இல்லையேல்
அந்தம(து) அடைவராகல்
ஆகும் ஐய! நீ
புந்தியில் நினைந்தன
புரிதியால் என்றான்''-

என்றும் வரும்.

இரு பாடல்களாலும் தெளிவாகும் இவற்றால், இறைவன் திருவருள் நெறிமுறையை உணர்ந்துகடைப்பிடித்து உய்தி பெறுவோமாக.

அறுவைப் பரிசோதனை

# இரட்டைத் தலைநாய்!

ஓர் உடல்: இரண்டு தலைகள்; அந்த இரண்டு தலைகளும் வெவ்வேறு நாய்களுடையவை! நினைத்துப்பாருங்கள். இப்படி ஒரு 'அவதாரத்தினை' ரஷ்ய அறுவை அறிஞர் ஒருவர் இப்படி ஒரு பிராணியை உண்டாக்கிக் காட்டியிருக்கிறார். அதுதான் இரட்டைத் தலைகள் கொண்டநாய்!

சின்னஞ்சிறு நாய்க்குட்டியின் தலையை மட்டும் அறுத்தெடுத்துப்பெரிய நாயின் கழுத்தினுள் ஒட்டுமுறையில் பொருத்தி உயிருடன் இருக்கும்படி செய்து காட்டினார் அவர். அவர் பெயர் வ்ளாடிமிர் பெட்ரோவிட்ச் டெனிகோவ் என்பது.

இந்த இருதலை நாய் ஆறு நாட்கள் உயிருடன்வாழ்ந்து சாதாரண நாயைப் போன்றே இயங்கியது. பெரிய நாயின் இருதயத்திலிருந்துசிறியநாயின்தலைக்கு ரத்தம்பாய்ந்து அதைஉயிருடன் இருக்கச்செய்ததாம். இந்த இரண்டு தலைகளும் அதற்குரிய சுபாவத்துடன் தான் இயங்கின. உதாரணமாக, சின்ன நாயின் தலை ஒருநாய்க்குட்டிக்குரிய விளையாட்டுப் புத்தியுடனேசுழன்றது. அவ்வப்போது உறுமியது. 'உர்ர்…உர்ர்…' என்று சத்தித்காட்டியது. யாராவது அதைத் தொட்டுத்தடவிக் கொடுத்தால் அது அவர்கள் கையை நக்கியது.

(10-ம் பக்கம் பார்க்க)

# கலைமகள் காட்சி கோடி

— நிலவின்தாசன் —

சொப்பனம் கண்டேன் அந்தச்
சுவைபடு கனக நேரம்
சிப்பியின் முத்து நாவில்
சென்றிடும் தொடர்ச்சி போன்று
தப்பிலாப் படலம் கொண்டு
சந்தித்த கனவு என்னை
பட்டிட விழித்தேன் அன்னை
பரிதிகாண் எழும்பு என்றாள்.

தாயிடம் சொன்னேன் ''அம்மா
சரஸ்வதி வந்தாள் கையைச்
சேய்தனைப் பிடிக்கும் பாவம்
சேர்ந்திடு வதனம் கொண்டு
வாவெனப் பற்றி ஓர்தல்
வளர்த்தியும் செழிப்பும் சேர்ந்த
காவினை அடைந்தாள் அங்கு
காட்டினள் காட்சி கோடி.''


''காட்சிகள் கோடி அம்மா
காட்சியில் ஒன்று அன்னாள்
மாற்றினள் தனது ரூபம்
மறைந்தவள் குயிலாய் வந்தாள்
சாற்றினள் 'கூ' 'கூ' வென்று
சக்தியின் கவர்ச்சி போலும்
ஈற்றிலே ஒவ்வோர் 'கூ'க்கும்
என்தாவும் கவிற் றம்மா.''

''பாரதி யாக வந்தாள்
பன்மொழிக் குறளில் வாழும்
தாரகன் செந்நாப் போதார்
தன்னறி வுருவில் வந்தாள்
ஏர்தனை இயந்திரத்தில்
இணைத்திடும் மேலைத் தேயப்
பேர்நிறை விஞ்ஞானிக்குப்
பிறந்தவன் போலும் வந்தாள்.''

''குருவிகள் இரண்டாய் வந்தாள்
கூடொன்று சமைத்தாள் அங்கு
திருதிரு எனக்கண் காட்டும்
சிற்றுளக் குஞ்சு தந்தாள்
விரைந்துண வூட்டி நின்றாள்
விடைபெறக் காட்டி நின்றாள்
அரைமுழ மேனும் ஞாலம்
அவளின்றி அசையா தம்மா.''

''கோடியில் சிலதே அம்மா
சொன்ன(ன்)னேன் உள்ளம் தன்னில்
மீதியை அன்னாள் செய்கை
மேவிட மறந்து விட்டேன்
ஆழியின் உலகம் தொட்டு
அதன் அந்தம் வரும்வரைக்கும்
சோதியால் நிற்கும் அன்னை
சுந்தரம் கோடி'' யென்று.


மற்றவர்களை
முந்திச் செல்ல
BSA
பி. எஸ். ஏ.
கோல்டன் டி லக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
நீடித்த உறுதி வாய்ந்தது
வசதிக்குச் சாதகமான அமைப்பு
'டெரி-டைப்' சீட்டுகள்
துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்
ஏகவிநியோகஸ்தர்கள்
கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்



## சைக்கிள் பந்தய ஓட்டம்

ஈழநாடு நடத்தவிருக்கும் சைக்கிள் பந்தயஓட்டத்தில் பி. எஸ். ஏ. சைக்கிள்கள் மட்டும்தான் பங்கு கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில், பல்வேறு பகுதிகளிலும் மாதாமாதம், சைக்கிள் பந்தய ஓட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பந்தயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள், பி. எஸ். ஏ. பைசிக்கிள் ஒன்று உங்கள் வசம் இருக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

பந்தயத்தில் பங்கு பற்றுவதற்கான கூப்பன்கள் வெகுவிரைவில் தினமும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும். இக்கூப்பன்களில் மட்டும் தான் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

மறவாதீர்கள்
முதற் பரிசு
பி. எஸ். ஏ. சைக்கிள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் தோன்றும்

—சரோஜா வேலாயுதம்—

மழை கண்டு மயிலாடக் கண்டே னென்றால்
மங்கையிவள் திருக்கோலம் அங்கு தோன்றும்
குயில் வந்து கனி யிதழ் கோது மென்றால்
கோதையவள் கோலவுரு கடிதிற் றோன்றும்
கிள்ளை வந்து பிள்ளை மொழி பேசு மென்றால்
கொள்ளையின்பக் காதலினுள் குரலே தோன்றும்
பெடையுடனே அன்றிலது தெங்கு ஏகின்
நாயகியாள் என்னுடனே பேசத் தோன்றும்.

நவ்வி வந்து கலையுடனே உலவு மென்றால்
நாயகியாள் என்னுடனே உலவத் தோன்றும்
சேல் துள்ளிக் கயத்தினிலே பாயுமென்றால்
வேல்விழியாள் விழியிரண்டும் அங்கு தோன்றும்
செவ்வானம் குட திசையிற் படரு மென்றால்
செவ்வாயாள் பசுமேனி இனிதே தோன்றும்
முல்லையது முறுவலித்து மலரக் கண்டால்
மலர்க் கொடியாள் முறுவலிப்பு அங்கு தோன்றும்.

தேனுண்ணும் வண்டங்கே திரியு மென்றால்
தானுண்ணும் இதழாளின் இனிமை தோன்றும்
சிறுகுன்று நிமிர்ந்தங்கு நிற்கக் கண்டால்
குறும்புடைய கோதையினுள் கொங்கை தோன்றும்
கமுக மலர் வெடித்தங்கு மலரு மென்றால்
அமுதமெனும் அவள் மலர்ச்சி அங்கு தோன்றும்
மாதுளைதான் கனி தூங்கி நிற்கக் கண்டால்
மாது அவள் கச்சேந்தும் நகிலே தோன்றும்.

அல்லியது தடாகத்தில் மலரக் கண்டால்
அல்லியவள் வதனந்தான் வந்து தோன்றும்
தெங்கேந்தும் இளங்குரும்பை தெரியு மென்றால்
அங்கினிக்கும் அன்பினளின் தனமே தோன்றும்
முந்தி வரும் கடலலைகள் மோது மென்றால்
வந்தணைக்கும் அவள் கரங்கள் அங்கு தோன்றும்
பவளமது பரவை தனிற் படரக் கண்டால்
எழிலணங்கின் இனித்திடு நல் இதழே தோன்றும்.

இளவாழைக் கன்றங்கு எழுந்து நின்றால்
ஏந்திழையாள் குறங்கெல்லை சரிக்கத் தோன்றும்
அன்னமங்கு உறங்கி யெழக் கண்டே னென்றால்
இன்னமுதாள் எழிற் சாயல் இனிதே தோன்றும்
அறல் தன்னும் ஆற்றோடை பார்த்தே னென்றால்
மறந்தறியா மாதுடைய குழலே தோன்றும்
குன்றேந்தும் கருமேகச் சாயல் கண்டால்
நன்றேயென் நாயகியாள் கூந்தல் தோன்றும்.
மருந்தெனவே மனக்கவலை போக்கும் மாதின்

விருந்தினிலே தோய்[illegible]திடவே என்றுந் தோன்றும்
வருந் துயரின் [illegible]னிலும் வனிதையாளின்
அருஞ் சாயல் தோ[illegible]றிடுலோ இன்பந் தோன்றும்
தருக்கிலா நற் றையலாள் தயவு காணின்
பொருனை நதிபோல உளம் பொங்கித் தோன்றும்
தோன்றுமொரு இயற்கையிலும் துயிலும் போதும்
துடியிடையாள் நினைவல்லால் வேறென் தோன்றும்.

# என் காதலி

—தென் புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன்—

பத்து நிலாப் பொழிகின்ற ஒளிமு கத்தாள்
பாவையவள் மேனியெல்லாம் தங்கம் தங்கம்
முத்தவள்தன் பல்லழகு நெளிந்த கூந்தல்
முழக்கணக்கில் நீண்டிருக்கும் நேரே எந்தன்
சித்தமது கலக்குகின்ற விழிகள் தாமும்
சீரான இருநாவற் கனிகளாகும்
எத்தனைதான் சொன்னாலும் நிறைவே இல்லை
எழில்வடிவம் தனக்கவளோர் எடுத்துக் காட்டு.

ஓடையிலே வருகின்ற புதுநீர் வானில்
ஒளிவிட்டுக் கண்சிமிட்டும் மீன்கள் நல்ல
வாடையிலே கலந்துவரும் குளிர்ச்சி சின்ன
வண்டுமொய்க்கும் சோலையிலே வளர்ந்தவாசம்
கோடையிலே கடற்கரையில் அந்திக் காட்சி
குளிர்வனத்தில் மான்கன்று அவள்தன் கண்ணின்
சாடையிலே பட்டவன்நான் கவிஞனானேன்
தானெனக்குக் காதலி யென்றவளும்சொன்னாள்.


"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
பெனியன்
ஸ்போட் சேட்
ரி சேட்
ரெறி சே
ரெறி பிளவுஸ்
பேபி வெஸ்ட்
தால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330


# காற்றே நீ கேட்டிலையோ

—4—

வானிருண்டு இடி இடிக்கிறபோது - சோழகக்காற்றில், கச்சான், வாடைக் காற்றில் காற்று மோதி மோதி அலைப்புண்ணும் போது-'வாடலை,' 'கற்பாறைகள்,' 'அறுகுகள்,'- இவற்றின் இடையே ஒட்டிக்கொண்டும், தங்கிக்கொண்டும் இருக்கும்மீன்கள்பயந்து இறியபடியே காற்று வாக்கில் வேகமாகக் கரையை நோக்கிவரும்.

வருகிற வாக்கில் விலங்கினத்துக்கு இலக்காயிருக்கும் ஒரே 'பார்வைப் போக்கில்' களக்கண்டியின் வால் பகுதியில் மோதி மோதி உள் நுழைந்து கூட்டம்கூட்டமாய் நிற்கும்.

கந்தசாமியும், பொன்னையனும் மாட்டிவைத்த 'களக்கண்டிக்குள்' இப்போதுஅம்பாரம் அம்பாரமாய் மீன்கள் நிற்கின்றன.

படகை ஒருவன் மரக்காலால் ஊன்றிப்பதித்து நிற்கக் கந்தசாமி இறங்கினான்.

'வைச்சுப்பிடிச்சிறது' என்று அவன் பலத்துக்கத்தினான். அதிக மீன் கூட்டத்தைக் கண்டால் கந்தசாமி அந்த மாதிரித்தான் கத்துவான். அவர்கள் எல்லாருமே அப்படித்தான்.

இடையே வீறிட்டுக் கத்தினான் கந்தசாமி. அந்தத் தொழிலாளியின் ஓலம் சோழகக்காற்றில் மிதந்து மிதந்து வெகுதூரம்கேட்டது. வெளி உலகத்துக்குக் கேட்கத்தானில்லை.

வத்தையில் அவனைத் தூக்கிக்கொண்டு மற்றவன் அவசரம் அவசரமாய்க் கரை சேர்க்கிறான்.

## தொடர் கதை

காலெல்லாம் இரத்தம் சேறுமாதிரி ஓடுகிறது. புகைமண்டிக்கிடக்கிற அரிக்கேன் லாந்தற் சுடரில் அவன் காற்பாதங்கள் பயங்கரமாய்த் தெரிகின்றன.

சோழகக் காற்றோடு எற்றுண்டு எற்றுண்டு மீனோடு அள்ளுப்பட்டுக்கொண்டு 'அஞ்சாலை' என்கிற பாம்புகளும்களக்கண்டியில் மாட்டிக்கொள்வதுண்டு. கொடிய பறநாகத்தின் தலையைப் போல அதன் அமைப்பிருக்

‘முனியப்பதாசன்’

கும். முழித்தபடியே கிடக்கிற அதன் கண்களுக்கு மனிதக்கால் கலைக் கண்டுவிட்டால்..பீறிக் குதறும்..இரத்தம் ஓட ஓட அதற்கு ருசியும் வெறியும் பிறக்கும். அது பிறகு விடவே விடாது. ஒரே குதறல்தான்.

கிழவன் சமைந்துபோய் நிற்கிறான். 'அஞ்சாலை' கடித்தால் விஷமில்லைத்தான். உபாதையும் இரத்தச் சேதமும் இருக்கிறதே..? கந்தசாமி சுருண்டுபோய்ப் படுத்துவிட்டான். பொன்னையனும் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டான்.

இந்த நினைவை ஒட்டிக் கிழவனுக்குப்பிறிதோர் சம்பவம் ஞாபகத்திற்குவந்தது.

சடுதியாய்த்தான் அது நடந்தது. செல்வராசனின் தந்தைக்குத்தான் நடந்தது.

நல்லஅமாவாசைஇருட்டு, படகைத்தாங்கிய படியே நால்வராய்ச் 'சிறுதீவை' நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

'தராசு' வெள்ளி மதியில் சுடர்விடுகிறது. நேரம் நன்றாகவே சாய்ந்துவிட்டது.

குருத்துப்போட்டு வலைத்துப்படுக்கிறபோது திடீரென்று 'சொறி நீர்' என்கிற பயங்கர வியாதிபிடித்துக்கொண்டது. 'காக்காய்ச்சொறி', 'நீலகண்டச் சொறி' என்றால்கூடப்பரவாயில்லை. இதுவோ பெரிய சொறி.' பற்றிய இடமெல்லாம் கொச்சிமிளாகயை அரைத்துப் பூசினாற்போல் எரிவு எழுந்தது. நெஞ்சு விலாப்பூட்டுப் போட்டுக் கொண்டு முட்டுகிறது. வாயாலும் மூக்காலும் இரத்தம் இரத்தமாய்க் கக்குகிறது.

அவசரம் அவசரமாய்த் தான் படகு திரும்பிற்று!

வந்தவேகத்தோடு மாளிப்பாய்க்குக்கொண்டு போகிறதற்கிடையில் அவன் செத்துப்போய்விட்டான்.

கிழவனின் கண்களில் நீர் தேங்கிற்று. அந்தத் தொழிலாளர்களது- பரவர்களது அடி ஆழத்தில் இருந்தும் பீறிட்டுப்பீறிட்டுக்கிளம்பிய விசும்பல் ஒலியும்- விம்மல் ஒலியும்-இரவு நேரத்தில் சோழகக் காற்றின் வீச்சில் கேட்டுக்கொண்டே தான் இருந்தது? அப்படி எத்தனை எத்தனை தொழிலாளர்களது விசும்பல் ஒலியும் - விம்மல் ஒலியும்அந்த இராப்போதில் எழுந்துகொண்டிருக்குமோ? வேகமாய்வீசுகிற காற்றிற்கு அது கேட்டமாதிரி இல்லைத்தான். இன்னும் கேட்கவில்லைத்தான். வெளியுலகத்திற்கும்தான் இனிக்கேட்குமோ, யார் கண்டது?

(தொடரும்)

## யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கு

யாழ்ப்பாணத்தவர், ஒருவர் இடருறின் அவர் இடரினைப் போக்க தம்மால் இயன்ற உதவியினைச் செய்வர். வெறுங்கையாக (ஒன்றும் இல்லாத கையுடன்) நோயாளி முதலியோரைப் பார்க்கச் செல்லமாட்டார். 'வெறுங்கை முழமிடுமா' என்னும் ஆழ்பொருள் பொதிந்த வாக்கியமும் அவரால் வழங்கப்படுகிறது. 'வெறுங்கை' என்பது 'வெறுமை கை' என்பவற்றிலிருந்து பெறப்படுகிறது. 'வெறுமை' என்னும் பெயர் 'வறுமை' என்னும் பெயருடன் பொருளில் ஒத்திருக்கிறது. வெறுமையுடைய கையெனினும், வறுமையுடைய கையெனினும் ஒக்கும். கோப்பெருஞ் சோழன் சிறுபறவைவேட்டையாடச் சென்று வறிய கையுடன் திரும்பும் வேட்டுவனைப் பற்றிப் பாடியுள்ளான்.

''குறும்பூழ் வேட்டுவன்
வறுங்கையும் வருமே.''
(புறநானூறு: 214,5)

யாழ்ப்பாண வழக்காகிய 'வெறுங்கை' என்பது பண்டைய வழக்காகிய வறுங்கை என்பதன் பொருளிலேயே வழங்குகிறது.

வடிவு

வடிவு என்னுஞ் சொல் அழகு என்னும் பொருளில் 'வடிவுடை மலைமகள்' போன்ற தேவாரச் சொற்றொடர்களில் வழங்குகிறது. யாழ்ப்பாணத்தில் இன்றும் இச்சொல் இப் பொருளில் வழங்கப்படுகிறது.


மிடறு

செந்தமிழ் சொற்களுக் காலப்போக்கில் பொருள் மாற்றமடைவதுண்டு. இம் மாற்றம் எழுத்து வழக்கை விடப் பேச்சு வழக்கில்தான் அதிகம் காணப்படுகிறது. 'மிடறு' என்னும் பெயர் கழுத்து, ஒலியெழும் கண்ட உறுப்பு, தொண்டை, கீழ்வாய் முதலிய கருத்துக்களை உணர்த்தும். ஆனால் அச்சொல் யாழ்ப்பாணத்தமிழில் புதுப் பொருளினை உணர்த்துகிறது. அத்தமிழ் பேச்சில் அச்சொல் ஒருவாய் கொண்ட திரவப் பொருளினைக் குறிக்கும். 'நான் ஒரு மிடறு கோப்பி கூடக் குடிக்கவில்லை' என்ற வழக்கில் 'மிடறு' என்னும் பெயர் சிற்றளவு கொண்ட [illegible] குறிக்கிறது.

—இளங்கதிர்


சலக்கழிச்சல்
தோல்சம்பந்தமான
சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்;
சச்சிதானந்தா
வைத்தியசாலை
மித்திரன் அம்பாள் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி P. O.





சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# மண் மணம்

யோன் செல்வராசா

பணக்காரர்கள் வாழும் நாடு மலேயா. பாலும் தேனும்பாய்ந்தோடும் நாடு. குவலயத்தின் குபேரபுரி என்றிவ்வாறெல்லாம் பார் புகழும் மலேயாவில் இருக்கக் கிளாக்கர் பொன்னுத்துரையால் மட்டும் முடியவில்லை. கிட்டத் தட்ட கடந்த அறுபது ஆண்டுகளாக நெருப்பு வெம்மையின் அருகேயிருந்து புழுங்குபவனைப் போன்று புழுங்கிக் கொண்டிருந்தார் அவர்.

“இந்தத்தள்ளாத வயதிலை இனி அங்கை போறது எவ்வளவு மடைத்தனம். இண்டைக்கோ நாளைக்கோ எண்டு நாட்களை எண்ணிக்கொண்டு மேலை போகிற சிந்தனையை விட்டுவிட்டு கடல் கடந்து போறதெண்டா உந்த உடம்பு தாங்குமோ” புத்திமதி கூறினர் அயலவர்.

“ஓ அவை சொல்லுறதைக் கேளுங்கோ; அங்கை போய் இனி என்ன செய்யப் போகிறியள். சும்மாவெறும் மனப்பிராந்தி. விட்டுத் தள்ளுங்கோ” ஒத்தூதினுன் அவரது மூத்தமகன் டாக்டர் தயானந்தம்.

இவற்றிற்கெல்லாம் அசைந்து கொடுக்கிறவரா இளாக்கர்? சிவன் கோவில் காளை மாடுபோல ஜம்மென்றிருந்தார்.

அவருடைய மனம் குமுறியது. அடுத்த நேரக் கஞ்சிக்கே வழியில்லாமல் வறுமையினுல் வாடித் தன் சொந்த நாட்டை விட்டுப் புறப்பட்டுவந்த பொடியன் பொன்னுத்துரை ஏதோ தூரத்து உறவினரின் உதவியால் அவருடைய வீட்டிற்கு எடுபிடி ஆளாகவிருந்து படித்து றெயில்வேயில் ஒரு இளாக்கராகச்சேர்ந்து இளாக்கர் பொன்னுத்துரையாகி பிள்ளைகளையெல்லாம் படிப்பித்து கெளரவமான உத்தியோகங்களில் சேர்த்து தானும் பிரதமஇளாக்காகி மலேயாவில் ஒரு புள்ளியாக நிற்கும் அவருக்கு தான் பிறந்த பொன்னுட்டில் ஒரு முறை காலூன்றத் தீராத ஆசையாகவிருந்தது. காரணம்... யாழ்ப்பாணம்' நினைத்த போதே அவருக்கு நாவிலே தேனூறி வருவது போன்ற உணர்ச்சி. கம்மென்ற ஒரு நறிய வாசனை மூக்கிலே அடித்தது. திரும்பித் திரும்பி அக்கம் பக்கம் பார்த்தார், வெறும் மனப்பிராந்திதான். இந்த மலேயாத் தீபகற்பத்திலே தேனினுமினிய பனம் பழத்தின் நறிய வாசனை வருவதாயின் அது மனப்பிராந்தியில்லாமல் வேறென்னவாக விருக்கும்.

விடாக்கண்டராக நின்ற இளாக்கரை மனம் மாற்ற முடியவில்லை. மூத்த மகன் தயா, பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களை எல்லாம் செய்வித்து விட்டுக் இளாக்கரின் தம்பியாருக்கும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு தந்தி அடித்தான்.

துறைமுகத்தில் கப்பல் புறப்பட ஆயத்தமாய்விட்டது. தயா ஒரு பெரிய பை நிறைந்தசிவந்ததிராட்சைப் பழங்களைக் கொண்டுவந்து தகப்பனுரிடம் கொடுத்தான்.

“கவனமாகப் போங்கோ, இலங்கையிலை முந்திரிகைப் பழம் இல்லையாம். இதைக் கொண்டுபோய் சின்னையாவிடம் கொடுத்துவிடுங்கோ.”

இளாக்கருக்குச் சிரிப்பாக இருந்தது. தன் வாழ்நாளில் என்றுமே கண்டறியாத சிறிய தகப்பனில் எவ்வளவு பாசத்துடன் கொடுத்துவிடுகிறுன். அப்படியாயின் பன்னிரண்டு வருடங்களாக தன் மடியில் வைத்து வளர்த்த அன்னைபூமியைக்காண மனம் துடிப்பதில்தவறென்ன?

கப்பல் புறப்பட்டது. அவருடைய மனம் என்னும் சிட்டு காலத்தையும், தூரத்தையும் கடந்து யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சென்றடைந்தது. நெய்தலும், மருதமும் கொஞ்சிக்குலவும் புலவர் பாடிய நவ ஆலயங்கள் சூழ்ந்திருந்த அரண்புரியும் நவாலிநல்லூரை நினைக்கின்ற பொழுதிலே அவரது உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகுபோல ஓர் இனம் புரியாத உணர்ச்சியால் உருகி வழிந்த வண்ணம் இருந்தது.

இந்த சமுத்திரம் இவருடைய சொந்த ஊர்ப்பிரயாணத்தை எண்ணித் தானும் மகிழ்ச்சி கொண்டாடுவது போலத் தன் அலைக்கரங்களால் கப்பலைத்தட்டி மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. யன்னலூடாகப் புகுந்து ஒவ்வொருவர் மேனியையும் தீண்டி விளையாடினுள் தென்றல் எனும் மென்மங்கை.

இளாக்கருக்கு உடம்பு இலிர்த்தது. அவருடைய உள்ளம் நவாலியூர்ப் பனந்தோப்புகளைச் சுற்றி வளையமிட்டது. தூரம் ஒன்றுக உள்ள வீடுகளையும் அடர்ந்த காடாக உள்ள பனந்தோப்பையும் மனக்கண்முன் நினைக்கிறுர். ஆடை அணியத்தெரியாத அந்தப் பிஞ்சுவயதிலே குக்குடு போட்டு ஓடிப்பிடித்து விளையாடியதை நினைக்க உடலின் ஒவ்வொரு நரம்புகளும்மீண்டும்அதைச் செய்யத்துடித்தன.

“குக்குடு குக்குடு குளவியனுரே...” எங்கோவிருந்து காதில் வந்து விழுவது போன்று ரீங்காரமிட்டன.

சின்னப்பொடியனுகஒளித்துத் திரிந்த ஆயிரக்கணக்கான பனைகளைச் சூழ்ந்த அந்தத் தோப்புகளை ஆசைதீரக் கண்களால் பார்க்கவேண்டுமென ஒரே வெறியாகவிருந்தது.

பனந்தோப்பின் இடையே உள்ள வெளிகளில் பின்னேரங்களில் ஊர்மக்கள் எல்லோரும் கூடி நிற்க தாச்சி விளையாடுவது எவ்வள இன்பம். வெற்றிகரமாகப் பழமோடினுல் ஊர்மக்கள் கை தட்டிச் செய்கிற ஆரவாரம் தான் எவ்வளவு.

யாழ்ப்பாணத்தவர்கள் அதிஷ்டசாலிகள்தாம். நீருற்றி வளர்க்காமலே காய்த்துச் சொரியும் பனையாகிய கற்பகதருவைச் சுற்றியது அவர் எண்ணம்.

மலேயாவிலே பட்டுப்பூச்சிகள் போல வீதிகளில் திரியும் சீனப் பெண்களைப்பார்க்கின்ற பொழுதெல்லாம் அவருக்கு யாழ்ப்பாணத்துப் பனம் பழத்து நினைவுகள் தான் வரும். தேனைப்போ லினிக்கும் பனம்பழம். குலமக்கள் அரைத்துப் பூசும் மங்களம் பொருந்திய மஞ்சளைப்போன்ற பனம் பழம்— அவரது உள்ளம் பனங்களி போல இனித்தது.

யன்னலூடாக நோக்கினுர். நிலவு மங்கை முகில்களுடன் இரகசியம் பேசுகிறுள்.

நிலவுகாலத்தில் குடிசைகளின் முன்னிலையில் அமர்ந்து பத்துப் பதினைந்து பனம் பழங்களை பிரித்துத் தோல் நீக்கி காடியுடன் பிசைந்து அடுக்குவதும், அயலவர், உறவினர் எல்லோரும் சூழவர அமர்ந்து ஒவ்வொரு கொட்டைகளாகச் சூப்புவதும் பழங்கதைகளைப்பேசிப் பேசி சுவைத்து உண்பதும் தேனிலவு இன்பத்தையும் வென்றதல்லவா!

யாழ்ப்பாணம் போனவுடன் கட்டாயமாகப் பனம் பழத்தை அயலவர், உற்ருர் உறவினர் சூழ உண்ணவேண்டும்.

பக்கத்தே கிடந்த திராட்சைப் பழப்பையைத் திறந்து ஒரு பழத்தை எடுக்கிறுர். கன்னியர் கண்டஞ்சும் கொடிய காமுகனின் கண்ணைப்போல விழிக்கிறது திராட்சை. என்ன இருந்தாலும் பனம்பழத்துக்கு நிகர் பனம்பழம்தான்.

இவ்வாறு இதயத்தில் பல ஆசைகளையும் சுமந்து கொண்டு வந்த கிளாக்கர் பொன்னுத்துரையை தன் வயிற்றிலிருந்து கொழும்புத் துறைமுகத்தில் கக்கிவிட்டது கப்பல்.

சிங்கப்பூர் சீமானை உரிமை கொண்டாடவெனத் தூரத்து உறவினர் உட்பட அனேகர் நான்முந்தி நீமுந்தி எனப் போட்டிபோட்டுக் கொண்டு வரவேற்றனர்

அரசாங்க அதிகாரிகள் தமது வழமையானகெடுபிடி வரவேற்பை முடித்துக் கொண்டனர்.

ஃ ஃ ஃ

இரவுபத்துமணிக்குஇளாக்கர் பொன்னுத்துரை நவாலி மண்ணிலே காலைவைத்தார். ஒற்றடிப் பாதைகளெல்லாம் இரட்டைத் தட்டுப் பஸ் ஓடக்கூடியதாக விசாலிக்கப் பட்டிருந்தன.

ஆத்திவாரத்துடன் அமெரிக்காவிலிருந்து பெயர்த்தெடுத்துவந்த ஒரு வீட்டின் முன்பு கார் நின்றது.

‘காறுகாறெண்டு’ காறித் துப்பியது ஒன்று இளாக்கர் மேல். ஆச்சரியத்துடன் அண்ணுந்து பார்த்தார்.. மி..ன் சா..ர..ம்.. மின்சார பல்பு.. அவருக்கு என்னவோபோல இருந்தது.

அந்த இரவிலேயே தன் ஊர் முழுவதையும் பார்த்துவிடவேண்டுமென ஆசையாயிருந்தது. எப்போ விடியுமென்றஏக்கத்துடன் படுத்துக்கொண்டார்.

நெடியஇரவுவிடிந்துமுடிந்தது.

ஊரைப்பார்க்கப்புறப்பட்டார்: தான் ஓடி ஒளித்துத் திரிந்த அந்தப்பெரிய பனந்தோப்பு..பொய்யாய்- பழங்கதையாய் மாறிவிட்டது. ஆங்காங்கே சில அமெரிக்கன் மாடல் வீடுகள் முளைவிட்டெழுந்து நின்றன.

உள்ளம் துடித்தது. எதையோ பறிகொடுத்துவிட்டவனைப்போன்று மேலும் நடந்தார். அதோ தூரத்தில் சிறிய வளவில் ஒரு கூட்டம் பனைகள்...தோப்பு.

ஆவலோடு ஓடினுர். வேலியில்லை. பனம்பழத்துக்காவ விருந்து பொறுக்கவும்ஒருவருமில்லை. அங்கு...

நாலைந்து கட்டாக்காலி மாடுகள் இனிய பனம் பழத்தை இடுக்கி சுவைத்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு பனையின் கீழும் பரவலாகப் பனங்கொட்டைகள். யாழ்ப்பாணத்து மக்களின் உணவுப்பஞ்சத்தைப் போக்கத்தீவிரமாகப்போராடிக்கொண்டிருக்கும் நேரத்திலே.. அவர்களுக்குப் பனம் பழத்தைக் கவனிக்க நேரமில்லைப்போலும். அவர்கள் பெருத அந்தப் பாக்கியத்தைப் பெற்ற மாடுகளைக்கட்டிக்கொண்டு கோவென்று கதறவேண்டும் போலவிருந்தது அவருக்கு.

(யாவும் கற்பனை)

---

4-11-66

வாரமலரில்

‘காங்கேயன்’

எழுதும்

‘இன்ப நிலை’

என்னும் சிறுகதை

வெளியாகிறது.

---

உருவகக் கதை

# நிறைவு

— நளாயினி வயித்திலிங்கம் —

பூமி தன்வழியில் சுழன்றுகொண்டிருந்தது. யாருடைய விஷயத்திலும் அது தலையிடவில்லை. தன்னைச் சுற்றி வலம்வரும் சந்திரனையோ மற்றும் தன்னையொத்த கிரகங்களையோ அது இலட்சியம் செய்யவில்லை. தன் நிதானமும் தானுமாய் உள்ளத்தே உறைந்த உவகையுடன் தன் கடமையில் ஆழ்ந்துபோயிற்று. கிள்ளைமொழி பேசிடும் சிறு குழந்தையின் சிறு நடைபோல தாய்மை நிலை எய்தி நின்ற பூமியும் சிறு அடிகள் எடுத்து வைத்து ஆதவனை வலம்வந்தது.

பூமியின் பருத்த உடலைச் சந்திரன் பார்த்தது. உடனே தன்னையும் பார்த்துக்கொண்டது. தனது உடல் அழகாக ஏற்ற பருமனுக இருப்பதாக அதற்குத் தோன்றியது. தன்னேடு ஒப்பிடும்போது பூமிக்கு இருக்கும் உடல் மிக்க பருமன் வாய்த்தது என எண்ணிக்கொண்டது. கர்வம் தலைக்கேறியது. சந்திரனுக்குத் தனது அழகையும், பொருத்தமான உடலையும், இளமையையும் பார்க்கப் பெருமை பிடிபடவில்லை.

“பூமாதேவியே! உன்னைப் பார்க்க எனக்கு எவ்வளவு சிரிப்பாக இருக்கிறது, தெரியுமா? இத்தனை பருமனுன உடலைச் சுமந்துகொண்டு உருள்கிருயே, என்னைப் பார்த்தாயா, என் இளமையும் அழகும் யாருக்குண்டு? என்னைத்தானே கவிஞர்கள் பாடிச் சென்றனர்.

“சீத மணிநெடு வானக்
குளத்திடை
வெண்ணிலாவே!—நீ
தேசு மிகுந்த வெண்
தாமரை போன்றனை
வெண்ணிலாவே”

என்று. உன்னை யார் பாடினுர்கள்? உனது பருமனையல்லவா பாடவேண்டும்? உன்னிடம் வேறு என்னதான் உண்டு?”

பூமி சிரித்தது! அந்தச் சிரிப்பிலே சந்திரனின் அறியாமையைப் பழிக்கும் ஒரு தெய்வீக ஒளி மின்னியது. அண்டசராசரங்கள் அதிர்ந்தன.

“அறிவிலா மனத்தோய்! எனது பருமனுக்குக் காரணம் என்ன தெரியுமா? எனது குழந்தைகளை - எண்ணற்ற மனிதக் குழந்தைகளை-நான் சுமந்துகொண்டிருக்கின்றேன். இத்தனை குழந்தைகளோடு கொஞ்சி மகிழ்கின்றேனே; உனக்குப் புரிகிறதா? உனக்கு ஒரு குழந்தையாவது உண்டா? உஹூம், கிடையாது. பிள்ளை பெற்ற தாயா, ஒரு குழந்தையுமில்லாத மலடியா மகிழ்ச்சி உடையவள்? குழந்தைப் பேறுடையவள் உடற்பருமனில் சற்று அதிகரித்துத்தான் இருப்பாள். அத்தகைய பேற்றில் அவள் இன்பமும் அடைகிருள் புரிகிறதா?”

பூமி மீண்டும் சிரித்தது. சந்திரனுக்கு என்ன பதில் கொடுப்பதென்றே புரியவில்லை.

அந்த நேரத்திலே ‘ரொக்கட்’ ஒன்று விர்ரென்று மேலெழுந்தது. அதனுள் இரண்டு மனிதர்கள்! நேரம் செல்லச் செல்ல அது சந்திரனை அணுகி அணுகிப் போய்க்கொண்டிருந்தது. சந்திரனின் வதனத்திலே மீண்டும் ஒரு முறுவல்! என்றுமில்லாத ஒரு வெற்றிப் புன்னகை!!

“ஆகா, பார்த்தாயா பூமாதேவியே உன் குழந்தைகளை? பெற்ற தாயை வெறுத்து என்னை நோக்கி வருகின்றன. இப்படித்தான் மாதா மாதம் வருடா வருடம் என்னைக் காண மனிதன் ஓடோடி வருகிருன்; போட்டியிட்டு வருகிருன். உன் தாய்மையைப்பற்றி மார்தட்டினுயே! இப்போது என் மகத்துவத்தை உணர்ந்தாயா?”

பூமி குமுறியது!

அதன் குமுறலினுலே ஒவ்வொரு அணுவுமே அசைந்தது. எரிமலைகள் ஜுவலித்தன! நதிகள் பொங்கின! மரங்கள் ஆடின! பூமிக்கு வந்துவிட்ட கோபம் சொல்லி மீளாதது. தன் குழந்தைகளை-தான் பெற்ற செல்வங்களை-சந்திரன் ஏளனம் செய்ததினுல் எழுந்த [illegible]மான உணர்ச்சி, அது.

“அட மோக்கே! என் செல்வங்களின் உள்ளக் கருத்து இன்னுமா உனக்கு விளங்கவில்லை? எனக்கு ஒரு போதும் அவை துரோகம் செய்ய எண்ணுவதில்லை என் குழந்தைகள் என்னை வெறுக்கவுமில்லை; உன்னை விரும்பவுமில்லை. உண்மை என்ன தெரியுமா? என் செல்வங்கள் உன்னைக் கைப்பற்றப் போகின்றன. என் பரந்த வயிற்றிலே இடம் போதாது என்று உன்னிடம்வரவில்லை. உன்னைத் தமக்குக்கீழ் பணியச் செய்யப்போகின்றன. உன்னை வென்று வெற்றி வாகை சூடி எனக்கு என்றுமிலா மகிழ்வைத் தரப்போகின்றன. பெற்ற தாய்க்கு வெற்றி தேடித்தரப் போகின்றன. பூமி சந்திரனை வென்று விட்டதென உலகம் பேசப்போகின்றது. நீ அடிமையாகப்போகிருய். என் குழந்தைகளின் அடிமையாகி ஆட்டம் காணப் போகிருய். அந்தக் காலம் வெகு தூரமில்லை.”

பூமியின் ரெளத்ரம் தேய்ந்து மகிழ்வாக மாறியது.

‘ரொக்கட்’ பாய்ந்தது!

படிப்படியாகத் தன் வேகத்தைக் குறைத்துச் சந்திரனிலே அது தன் உடலைச் சாய்த்தது.

உள்ளேயிருந்த வெற்றி வீரர்கள் வெளியே வந்தனர். வெற்றிக்கொடி நாட்டினர்!

சந்திரன் தலையைக் குனிந்துகொண்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சங்கீத சபைகள்
## வளர்ச்சிக்கு இன்னும் இடமுண்டு

— வி; என். பி. —

சீர்நாடக சங்கீத சபைகள் எல்லாவற்றுள் ளும் தலையாய சபை வட இலங்கை சங்கீத சபை. இதை அறியாதார் யாருமில்லை. இச்சபையி னர் ஆண்டாண்டு தோறும்சங்கீதப்பரீட்சை களை இலங்கை முழுவதி லும் நடத்திவருகிறார் கள். இப்பரீட்சைகளில் தேறியவர்களுக்கு அர சாங்கமும் அங்கீகாரம் அளிக்கிறது.

இச்சபையின் ஆதரவில் மிகவும் உயர்தரமான இசைக் கச்சேரிகள் அவ் வப்போது நடைபெறு கின்றன. இம்மாதம் முதல் வாரத்தில் இவர்க ளது முயற்சியால் யாழ்ப் பாணத்து மக்கள் கடந்த எத்தனையோ பல ஆண்டு களாக கேட்டிருக்க முடி யாத ஓர் அபூர்வமான வீணைக் கச்சேரியைக் கேட்க முடிந்தது. இந்தி யாவில் பிரபல பாடகரா கிய ஸ்ரீ எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதரின் புத் திரியாகிய செல்வி முத்து லட்சுமி விருதிலகத் தம், பாணி, பக்குவம், ஞானம் முதலியவற்றுள் வைத்திலவர வித்தியால யத்தில் திரண்டிருந்த ரஸிக மக்களை கானவாரி யில் மூழ்கித் திணறடித்து விட்டார். [illegible]று அவர் வாசித்த [illegible]வாணி ராக மும் ஆனந்[illegible] பைரவி ராக மும் கேட்போருக்கு ஒரு புதுவித அனுபவத்தை உண்டாக்கியது. பின்னுக் கிருந்து யாரோ ஒருவர் பாடுவது போலிருந்த தென்று ஒரு பழுத்த ரஸி கர் மூச்சுவாங்க என்னி டம் தெரிவித்தார்.

பக்கவாத்தியம் வாசி த்த மிருதங்கம் ஏ. எஸ். ராமநாதன் அவர்கள் வாய்ப்பாட்டுக்கு வாசிப் பதுபோலவே மிகத் திற மாக வாசித்தார்.

வீணைக் கச்சேரியில் தம் புரா ஸ்ருதி வைத்துக் கொண்டது அவசியமா என்றும் வீணையிலேயே ஸ்ருதி இருக்கிறதே என் றும் தம்புரா வீணைக்கு சில சமயங்களில் இடை யூறுயிருந்ததென்றும் ஒரு சங்கீத வித்வான் கச் சேரி முடிவில் என்னிடம் கேட்டார்.

ஃ ஃ ஃ

"நம்முடைய சிறிய தீவிலே ரஸிகத் தன்மை என்ற பொருள் ஒறுத்தி ருக்கிறது. யாழுக்கும் பாணருக்கும் நமக்கும் ஒருவித சம்பந்தத்தை யும் காணோம். இந்தநிலை மாறவேண்டுமாயிருந் தால் ஊரெங்கும் சங்கீத சபைகளையும் சங்கீதக் கல்லூரிகளையும் ஸ்தா பித்து அவற்றின் மூலம் இசை பெருக்கி ஜனங்களி டையே ரஸானுபவத்தை உண்டாக்க வேண்டும். தென்னாட்டில்போல மாதம் மாதம், வாரந் தோறும், ஏன் ஒவ்வொரு நாளும் கச்சேரிகள் நடாத்தவேண்டும்."

இவ்வாறு இருபத் தொரு வருடங்களுக்கு முன்பு (16-2-45) அடி யேன் வேறொரு பத்திரி கையில் எழுதி கனவு கண் டது இவ்வளவு சீக்கிரத் தில் பலித்திருப்பதைக் கண்டு அளவிலா மகிழ்ச் சியும் பெருமிதமும் அடைகிறேன்.

சங்கீதசபைகளைப்பற்றி இன்னொரு வார்த்தை. இந்தியாவில் மியூஸிக் அகாடமி, தமிழிசைச் சங்கம் முதலிய சபைகள் இத்தனை வருட காலம் தொடர்ந்து அரிய இசைத்தொண்டு ஆற்றி வருவது அவற்றின் பொருளாதார பலம் தான். பெரிய பெரிய தனவந்தர்கள் அவற்றில் அங்கம் வகிக்கிறார்கள். முற்காலத்து ஜமீன்தார் களையும் பிரபுக்களையும் போல இவர்கள் கலைவா ணர்களுக்கு நன்மதிப்புக் கொடுத்து கச்சேரி செய் யும் வித்வான்களுக்கு கணிசமான சன்மா னத்தை வழங்கி கலையை வளர்க்கிறார்கள்.


அந்த நிலை இங்கும் வர வேண்டும். இங்கு தோன் றும் பல சங்கீத சபைகள் போதிய பணவசதி இல் லாமையினால் கச்சேரி வித்வான்களுக்கு தக்க சன்மானம் அளிக்க முடி யாமல் பூமாலை புனைவ தோடுவிட்டுவிடுகின்றன. இங்குள்ள சங்கீத சபை களில் பணம் படைத்த சீமான்கள் சேரவேண் டும். கச்சேரிகளையும். சங்கீத சொற்பொழிவு களையும், விவாதசர்ச்சை களையும் நடத்தவேண் டும்.

அப்படிச் செய்வோமா னல் இனிமேல் இருபத் தோர் ஆண்டுகள் காத்தி ருக்கவேண்டியதில்லை. இருபத்தொரு மாதங் களில் நாம் இந்தியாவின் தரத்துக்கு வரமுடியும்!

# கலை அரங்கம்

## நடிகர் தங்கவேலு தாக்கப்பட்டார்!

தங்கவேலு பெரிய குத்துச்சண்டை வீரர்! பெருமும் புகழும் கொண் டவர். அவரது திறமை யைப் புகழாதவர் யாரு மிலர்! அவரைத் தேடி வெளிநாட்டிலிருந்து ஒரு பெண் வந்தாள். தங்க வேலுவுக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்ததும் சபலம் தட்டியது. பேச் சைத் தொடங்கினார். அவளுக்குகுத்துச்சண்டை பயில ஆசையாம். 'அதற் கென்ன கற்றுக்கொடுத் தால் போச்சு' என்று சொன்னார். பின் ... காத லர்களாகி விட்டார்கள்! இந்த விஷயம் தங்கவேலு வின் தாய்மாமனுக்குத்



தெரிந்துவிட்டது. 'உனக் காக ஒருபெண்ணைவளர்க் கிறேன்! நீ வேறே பெண்ணை லவ் பண்ணுய்?' என்று தங்கவேலுவை மாமா தாக்கிவிட்டார்.

இப்படிப்பட்ட காட்சி யொன்று சேலம் முனிஸ் தயாரிக்கும் 'தங்க வளை யல்' படத்திற்காக சேலம் ரத்னா ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டது.

## காசி பயணம்! சிவாஜி போனர்!!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் காசிக்குப் போனர். புனித கங்கை யில் ஸ்நானம் செய்தார். பிரார்த்தனை செய்வதற்கு மட்டும் அவர் அங்கு போகவில்லை. 'பராசக்தி கருணை' படத்துக்காகத் தான் அங்கு சென்றார். இப்படப் பிடிப்பில் கே. பி. சுந்தராம்பாளும் கலந்துகொண்டார்.

திரைக்கதைவசனத்தை கு. மா. பாலசுப்பிரமணி யம் எழுதியுள்ளார். கே. வி. மகாதேவன் இசை யமைத்துள்ளார். ஆர். ஆர். சந்திரன்ஒளிப்பதிவு செய்து டைரக்ட் செய்கி றார்.

## பாலாஜியின் 2-வது படம்

நடிகர் பாலாஜியின் 2-வது படம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கி றது. 'கோல்ட'வில் கவி ஞர் கண்ணதாசன் எழு திய பாடல் ஒன்று இப் படத்திற்காகபதிவானது. எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைக்க, டி. எம். எஸ்.பாடியுள்ளார். பாட லின் முதல்வரிகள்;-

"பன்னீரிலே தாமரைப்பூ தள்ளாடுதே அலைகளிலே"

இதில் சிவாஜிகணேசன் கதாநாயகனாக நடிக்கி றார். கே. ஆர். விஜயா இவர் ஜோடியாக நடிக்கி றார். இதை ஏ. சி. திருலோகசந்தர்டைரக்ட் செய்கிறார்.

## 'சிங்கதிலிங் காவலன்'

புதிதாக ஆரம்பிக்கப் பட்ட குழந்தைவேல் கலை மன்றத்தினர் தங்களின் முதல்தயாரிப்பாக1961ம் ஆண்டு கலைக்கழகப் பரிசு பெற்ற "சிங்கதிலிக் காவ லன்" என்ற சரித்திரநாட கத்தை அரங்கேற்ற விருக் கிறார்கள். இதற்கான ஆரம்பவிழா கோட்டைக் காடு அரசினர் பாடசாலை யில் மன்றத் தலைவரும் முதுபெரும் நடிகருமான திரு. ஐ. நடேசன் தலை மையில் நடைபெற்றது. இந்த நாடகத்தை எழுத் தாளர் 'சொக்கன்' எழுதி யுள்ளார்.

விழாவிற்கு மன்ற அங் கத்தவர்களும் பொதுமக் களும் சமூகம் கொடுத் தார்கள். கலைகளுக்குப் பூஜை நடாத்தி நடிகர் கள் ஒவ்வொருவருக்கும் பாகங்கள் வழங்கப்பட் டன. இதில் திரு. ஐ. நடே சன், திரு. குணரத்தினம், திரு. சிவபாதம், திரு. சண்முகம் ஆகியோர் பிர தான பாகமேற்று நடிக்கி றார்கள். இதன் இசை அமைப்பு வேலைகளைத் திரு. சற்குருநாதன், திரு. வேலையா ஆகியோர் ஏற் றுள்ளனர்.

## நாகேஷ்-மனோரமா ரோமியோ-ஜூலியட்டாக!

உமையாள் புரொடக் ஷன்ஸாரின் பெயரிடப் படாத இரண்டாவது படத்தில் நாகேஷும் மனோரமாவும் ரோமியோ ஜூலியட்டாக நடிக்கின் றனர். அவர்கள் இந்த ஒரிஜினல் காதலர்களாக நடிக்கவில்லை.

நாகேஷ் ரோமியோ என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் கம் பௌண்டராக நடிக்கி றார். மனோரமா ஜூலியட் என்று பெயர்வைத்துக் கொண்டிருக்கிறார். வக்கி லின் டைப்பிஸ்டாக! இவர்களின் காதல்காட்சி கள் சிறந்த நகைச்சுவைக் காட்சியாக அமையுமாம்! சுந்தரராஜன் வக்கீலா கவும், ரவிச்சந்திரன்டாக் டராகவும் நடிக்கின்ற னர். வக்கீலின் மனைவி வாணிஸ்ரீயும் டாக்டரின் காதலியாக கே. ஆர். விஜயாவும் நடிக்கின்ற னர். கதை வசனங்களை கலைஞர் கருணாநிதி எழுத கே. வி. மகாதேவன் இசையமைக்கசந்திரபாபு ஒளிப்பதிவு செய்கிறார். புதியஇரட்டையர்களான ராம்நாத் - பிரான்சிஸ் டைரக்ட் செய்கின்றனர்.

### — நம் நாட்டுக் கலைஞர் —

நம் நாட்டு கலைஞர்களுக்கு இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி! உங்கள் படத்து டன் உங்களைப்பற்றிய முழுத் தகவல் களையும் எழுதி அனுப்புங்கள். பெண்களாயிருந்தாலும் சரி, ஆண்களாயிருந்தாலும் சரி, கலைப் பணியில் எந்தத் துறையில் பணியாற்றினா லும் தெளிவாக அழகாக விபரங்களை எழுதி அனுப்பி வைத்துவிடுங்கள். வாரா வாரம்நாட்டுகலைஞர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவார்கள்; அனுப்பவேண்டிய முகவரி: "நம் நாட்டுக் கலைஞர்" 'கலையரங்கம்' 'ஈழநாடு' [illegible] இல. 49 யாழ்ப்பாணம்.

தயாரிப்பு: ராஜகோபால்

## புகழ் பெறு முன்னர்!

நடிகர்திலகம் சிவாஜி கணேசன் பராசக்திபடத் தில் நடித்துக் கொண்டி ருந்த போது, அவர் நடிக்



கத் தகுதி அற்றவரென் றும், வேறு ஆளைப்போடும் படியும்தயாரிப்பாளரான பீ. ஏ. பெருமாளுக்கு சிபார்சு செய்தார் பிரபல படஅதிபர்! ஆனல் நடி நடிகர் திலகம் நடித்த பராசக்தி வெற்றி முரசு கொட்டி தமிழ்பட உலகில் ஒரு பெரும் பர பரப்பை உண்டாக்கியது. இன்று இந்தியாவிலே — ஏன் ஆசியாவிலே சிறந்த நடிகராக விளங்குகிறார் நடிகர்திலகம்!

சாதனா பிலிம்ஸ் தெலுங்கு சம்சாரப்படம் தான் சாவித்திரி நடித்த முதல்படம். அதில் அவர் நடிக்கத் தகுதியில்லை



என்று ஒதுக்கப்பட்டார். இன்று தமிழ்ப்படவுலகி லும், தெலுங்குப்படவுல கிலும் நடிப்பில் தனக்கு ஈடு இணையில்லை என்றுகூறு மளவுக்கு வந்துவிட்டார் நடிகையர் திலகம்!

## மனைவி

சத்தியா மூவிஸாரின் 'மனைவி' சென்ற வாரம் ஸ்டுடியோவில் தொடங் கியது. முதல் நாளன்று எம். ஜி. ஆரும், எம். என். நம்பியாரும், கே. கண்ண னும், விஜயராணியும் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டது.

இதே காட்சியின் தொ டர்ச்சியாக எம். ஜி. ஆர்., கண்ணனுடன் மோதும் சண்டைக்காட்சியும்படப் பட்டது. அசோகன் முக் கிய வேடத்தில் நடிக்கின் றார்.

திரைக்கதையை தயா ரிப்பாளர் ஆர். எம். வீரப் பனும், வசனத்தை வித்து வான் வே. லட்சுமணனும் நா. பாண்டுரங்கனும் அமைத்துள்ளனர். ப. நீல கண்டன் டைரக்ட் செய் கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எழுதுகிறேன்?

...சினிமா உல
...ி. ஆர். என்ற
...து மக்கள்
...தை எவ்வளவு
...று, தனக்கென
...னியிடத்தைப்
...ாழ்ந்துகொண்
...ாதிலும், பின்
...பெரியதொரு
...மத்தியிலேயே
...கொண்டிருக்

...கள் திலகம்'
...ிட்டு அழைத்
...அவரது புக
...டித்து, படுகு
...எம். ஜி.
...விடாமதை
...ாண்டிருக்கி

...ரிடியேயே
...ன் ஒருவனுல்
...ாடுக்கப்பட்டு
...ஆர். கொலை
...செய்யப்பட்
...ொன்றுல்,
...ருக்கு இப்போ
...மத்து தெளி
...புலனுகின்றது.
...ஆரின் செல்
...குறைப்பதற்கு
...ல்கார ர் கள்
...டுத்தப் படுகி
...தென்னிந்திய

பமாகிறது. எம். ஜி. ஆருக்கு எதிராக செய்யப்படும் அர்த்தமற்ற பிரசாரங்களுக்கு சாட்டையடிகொடுக்கவே இதனை எழுதுகிறேன். அதே நேரத்தில் இடையிடையே எம். ஜி ஆர். குறைகளையும் எடுத்துச் சொல்வேன். 'தராசு' நிலையில் இருந்தே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

கடைசியாக 'மக்கள் ஸ்ரீ' என்ற புதுப்பெயர் ஒன்றை அவருக்கு சூட்டியிருப்பதுபற்றி காரசாரமான எதிர்ப்புகளும், கண்டனங்களும் வரும் என்றும்தெரியும். அதற்கும் விளக்கம் கொடுக்காமல் விடவில்லை!

[அடுத்த வாரம்:' இந்தப் பட்டம் ஏன் பொருந்தாது?']

...ள் ஸ்ரீ

★

...கலா

...லகும்

...ர் அம்சம்

...ஆருக்கு நாட்
...மதிப்பைப்
...பெரிய நடிகர்'
...'என்னென்
...ல்லைகள் செய்

...ாயெல்லாம்
...ாது எம்.ஜி.
...புகழும் செல்
...அழிக்கப்பட்டு
...டுவிடுமோ மா
...வர்மீது அள
...றுள்ள ஆதர
...அஞ்சுகின்ற

...ளர்களின்
...பமே என்னை
...க்கட்டுரையை
...த்தது. எம்.ஜி.
...ிராக செய்யப்
...த்தனிதமான
...னமான' வேலை
...வலிக்கமாக
...ளதை ஆணித்
...விளக்கங்களு
...லிலேயே இந்த
...ட்டுரை ஆரம்

## 'மெக்கானிக்' ஜெய்சங்கர்மீது தேவிகாவுக்கு காதல்!





பெரிய பொலிஸ் அதிகாரியின் மகள் அப்பெண். சதா சர்வகாலமும் நாகரிகத்திலேயே மூழ்கிகிடந்த அவளைச் சுற்றி எத்தனை எத்தனையோ பணக்கார வாலிபர்கள் வட்டமிட்டனர். அப்பெண்ணின் கடைக்கண் பார்வைக்காக காத்திருந்த கட்டிளங்காளைகள் ஏராளம்" ஏராளம்!

அப்படியெல்லாம் இருந்தும் அவள் ஒரு சாதாரண மோட்டார் மெக்கானிக்மீது ஆசைகொண்டாள். அவனையே சுற்றி வந்தாள். அவனும் இவள் மீதுமையல்கொண்டான். இருவரும் அடிக்கடி சந்திப்பார்கள். மனம்விட்டுப் பேசுவார்கள். இறுதியில் இருவரும் திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை நடாத்தவும் திட்டம் தீட்டினர்கள். இவர் திட்டம் நிறைவேறியதா இல்லையா என்பதை 'திருமுருகன்' பிலிம்ஸார் தயாரிக்கும் 'தெய்வீக உறவு' படம் வெளிவந்தால் தெரிந்துவிடும்.

இதில் "மெக்கானிக்" காக ஜெய்சங்கர் நடிக்க காதலியாக தேவிகா நடிக்கிருர். மற்றும் எஸ். வி. சுப்பையா, வி. கே. ராமசாமி, மனோகர், சுந்தரிபாய், மாஸ்டர் ஸ்ரீதர் ஆகியோர் நடிக்கின்றனர். வசனகர்த்தா பூவை கிருஷ்ணன் எழுத சத்யம் டைரக்ட் செய்கிருர்.

## ஷீலா அல்ல, இனி இவர் வாத்தியாரம்மா!

வாத்தியாரம்மாவாகிவிட்டார், ஷீலா! எப்போது என்று கேட்கிறீர்களா? 'கௌரிகல்யாணம்' படத்துக்காகத்தான். சரவணா கம்பைன்ஸாரின் இப்படத்தில் வாத்தியாரம்மாவாகத் தோன்றப் போவதை நீங்கள் கட்டாயம் பார்க்கப்போகிறீர்கள்.

அவர் பணியாற்றும் பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழாவில், அவர் பாடும் சரஸ்வதிப்பாடல் சமீபத்தில் ஜெமினி ஸ்டூடியோவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

ஜெய்சங்கர் இப்படத்தில்தபால்காரராகநடிக்க ஜெயலலிதா அவரது சகோதரியாக நடிக்கிருர்.

## ... எனக்கு வெட்கமாயிருக்கிறது!

### சரோஜாதேவி சொல்கிருர்

...ிகர்களையோ, பத்திரிகையாளர்களையோ சந்தித்துப்பேச வெட்கப்படுகிருர் கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி.



பேட்டியின்போது அவர் இப்படியாகத் தெரிவித்தார்:-

'நான் மிகவும் வைதிகமான குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் இசை, நடன வகுப்புகளுக்கு மட்டும் செல்வதற்கு பெற்ரேர் அனுமதி தந்தனர். நான் பிறந்த ஊரான பெங்களூரில் நாடகமொன்று நடக்கவிருந்தது. அதில் நடிக்கவேண்டிய கதாநாயகி நோய்வாய்ப்பட்டுவிட்டார். நான் அவரது பாத்திரத்தை நடிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனக்கு மேடை அனுபவம் இல்லாதிருந்தபோதிலும் நல்ல முறையில் நடித்தேன். இப்படித்தான் நான் சினிமா உலகத்துக்கு வந்தேன். ஆனலும்... எனக்கு பொதுமக்களையோ, ரசிகர்களையோ பார்க்க வெட்கமாயிருக்கிறது. எனக்கு விளம்பரம் பிடிப்பதில்லை!'

# நமது நூல் நிலையம்

**தண்டலை:** (கவிதைத் தொகுதி) ஆசிரியர்; கவிஞர் ச. வே பஞ்சாட்சரம், விலை: ரூ. 1-50. வெளியீடு: பூபாலை பதிப்பகம்.

கவிஞர் பஞ்சாட்சரம் இன்று வளர்ந்து முன்னணிக்கு வந்துள்ள கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். ஏற்கனவே "எழிலி" என்ற காவியத்துக்காகச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர். பல்வேறு கவியரங்குகளில் பாடப்பெற்ற கவிதைகளே 'தண்டலை' என்னும் நூலாக மலர்ந்துள்ளது. இரசிகப் பெருமக்களின் செவிக்கு இன்பமூட்டிய கவிதைகள், நூலுருவம் பெறுவதனுல் அவர்கள் சிந்தைக்கும் இன்பத்தை ஈயலாம் என்ற பெருநோக்கோடு நூலை உருவாக்கியமை பாராட்டற்குரியது.

கவிஞர் வயதில் இளைஞராலும், பழமையைப் பேணும் பண்பு மிக்கவர். பழமையிற் காலகொண்டு புதுமையை வரவேற்கின்ற பண்பை இவரது கவிதையிலே காணலாம்.

"மாசு நீங்கிட மண்ணவர்
நெஞ்செலாம்
மாண்பு சேர்ந்திட
வந்தவர் பாவலர்"...

இவ்வாறு பாவாணர் பண்பைக் கூறிச் செல்லும் கவிஞர் பாடலிலே துடிப்பினூடே 'மண்ணவர் நெஞ்செலாம் மாண்பு சேர்ந்திட' என்னும் உயரிய நோக்கம் மேலோங்குவதைக் காண்கின்ருேம்,

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

"வெண்ணிலாவொரு
பெண்ணை உமிழ்ந்தது
மெய்ம்மறையவள்
பண்பை வகுத்தது
விண்ணிலும்இனை
யற்ற பசுங்கிளி
மெய்யெலாமெழிற்
காய்களும் பூக்களும்
பண்ணிலும்பெரு
வல்லபி பண்ணுடன்
பார்மயங்கிடும்
ஆடலி அன்னவள்
கண்ணிலேயிவள்
கட்டெழில் பட்டது
காதலித்தனள்
என்றிடு மின்பமும்"

"இன்பத்தின் இன்பம்" என்ற தலைப்பிலே வெண்ணிலவு தந்த பெண்ணைக் காட்டுகிருர். இயற்கையின் பத்தைத் துய்த்து அதனூடே செல்லுகின்ற கவிஞர் "மெய்ம்மறையவள் பண்பை வகுத்தது" என்கின்ற பான்மை துய்ய இதயத்தினை பிரதிபலிக்கிறது! பழமையின் பண்பு அங்கு மேலோங்கி வளர்கிறது.

"வன்னியிலே நிலம்
பெற்ருன்
குடிசை வைத்தான்
மண்டிவளர் மரஞ்செடிகள்
மயமாய் நின்ற
வன்னிலமும் பொன்னி
லமாய்
மாறும் வண்ணம்
மாட்டோடு மாடாட
உழைத்தான் சுட்டே
இன்னல்தரும் வெயிலென்ன
மழைதான் றென்ன
ஏற்றங்கே இரவுபகல்
உழைத்தான் பாலைச்
செந்நெல்தரு வயல்
கண்டான்
செழிப்புக் கண்டான்
இந்தையெலாம் தேன்மாரி
பொழியக் கண்டான்"

இலங்கையின் வடபகுதியில் வழங்கப்படும் குடியேற்றக் காணிகள் மனித உழைப்பால் பொன்னிலமாய் மாறுகின்ற எழிலை "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" என்கின்ற வள்ளுவன் வாய்மொழியை அடியாகக் கொண்டு புதுமையான நிதர்சனத்துக்கூடே காட்டுகிருர். தேசியப்பற்ருேடு, மனித சிந்தனை உழைப்பில் இனிமை காண்பதை தெளிவாகக் காட்டுகிருர்.

"காரேறிப் பூத்துக்
கனநீர் பொழிந்தேகி
நீரேறிப் பூத்து
நின்ருட நெற்கதிர்கள்
போரேறிப் பூத்துப்
பொலியட்டும்...,"

இந்தக் கவிதையை விபந்த முகவுரையில் கவிஞர் சச்சிதானந்தம் குறிப்பிட்டுள்ளார் இம்முகவுரை புத்தகத்தின் சிறப்பை மேலும் உயர்த்துகின்றதென்ருல் அது மிகைப்பட்டதாகாது.

'தண்டலை என்னும் அழகான சொல், கம்பன் காவியத்துள் மிளிர்ந்து சிறப்புத் தருவதை அறிஞர் அறிவர். அத்தகைய சொல்லை தலைப்பாகத் தெரிந்து செப்பலோசைச் சீருடன் கவிதைகள் திகழ்கின்றன.

ஆயினும் இக்கால இளம் எழுத்தாளருட் சிலர் தம் சொந்த மனக்குரோதங்களை எழுத்தில் புகுத்தி மற்றவர்களையும் அந்த குரோதத்தை அனுபவிக்கச் சொல்வது போல் சில கறைப்பாடான கருத்துக்கள் விரவியுள்ளதைச் சுட்டிக்காட்டவே வேண்டியிருக்கிறது. திரு. ச வே பஞ்சாட்சரம் ஈழத்தில் முன்னணியில் நிற்கின்ற கவிஞர்களுள் ஒருவர் என்பது மறைக்க முடியாத உண்மை. மென்மையான சலனத்தைக் கூடத் தாக்குப் பிடிக்கத் திராணியற்ற மனமே இந்தக் குறைபாடுகளைச் செய்யத் தூண்டியிருக்கக்கூடும். அதை விடுத்து பொதுமையான கருத்துக்களைப் புலமையாற் காட்டிச் சொல்லுவாராளுல் இன்னும் மேலே உயரமுடியுமென்பதை உணரவேண்டும்.

"தண்டலை" பெயருக்கேற்ற தமிழ் மணங்கமழும் கவிதைச் சோலைதான் தமிழ் மக்களின் இதயங்களைத் தொட்டுக்கொண்டு நிற்கும் உயரிய பாடல்கள் கொண்டு விளங்கும் இக்கவிதைத் தொகுதி விருந்தும் மருந்துமாக மிளிர்கின்றது. இது புகழ் மொழியல்ல.

—இரசிகன்

★

### வரப்பெற்ருேம்

**நெஞ்சில் நிறைந்தவள்:-** ஆசிரியர்: சி. சிவஞானசுந்தரம், விலை: ரூ. 1-25.

ஃ

**கீ. வா. ஐ. மணிவிழாமலர்.** ஆசிரியர்கள்: கி. லக்ஷ்மணன் செ. தனபாலசிங்கன்.

ஃ

**கந்தர் அநுபூதி:** சுரதாள அமைப்புடன் கூடியது. ஆசிரியர்: டி. ஏ. சம்பந்தமூர்த்தி, விலை சதம்: 75.

ஃ

**இசையிலக்கணம்:** ஆசிரியர்: பி. சந்திரசேகரம் (சங்கீத பூஷணம் இசைமணி) விலை: ரூ. 1-25

ஃ

மாவிட்டபுரம் ஸ்ரீமதி ஞானசுந்தரம் நாகேஸ்வரி நினைவு மலர்.

குறள் விளக்கம்

# கோல் காணுக் கண்!

— பொ. சண்முகநாதன் —

'ஐந்து நாட்களில் வந்துவிடுகிறேன் என்று சொல்லிப்போனவன் ஆறு நாட்களாகியும் வரவில்லையே" என்ற கோபம்-கவலை அவளுக்கு! ஒரு நாள் தாமதம் தான் என்ருலும் அது அவளுக்கு ஒரு யுகம்போல் வேதனையைக் கொடுக்கிறது.

'என்னை மறக்கும்படியாக அவருக்கு அங்கு அப்படி என்ன பாரதூரமான வேலைதான் இருக்கிறதோ!' எனக் கோபப்பட்டாள் அவள்.

'என்னைவிட அழகான அணங்குயாராவது அவரது கருத்தைக் கவர்ந்துவிட்டிருக்கலாமோ!' எனக் கவலைப்பட்டாள்.

முடிவில் ஒருதீர்மானத்துக்கு வந்தாள்.

அவர் வந்ததும் அவரைப் பற்றிய அக்கறையே இல்லாதவள் போல் - அவரோடு பேசாது - அவரைக் கவனியாது வாளா இருந்து ஊடல் செய்யவேண்டும். இந்த ஊடலுக்குப்பின் எனது ஆத்திரத்தையெல்லாம்கொட்டி அவர்மீது பொரிந்துதள்ள வேண்டும். பேச்சினிடையே என்னை மறக்கும்படியாக 'அப்படித்தங்கள் கருத்தைக் கவர்ந்த அக்காரிகைதான் யாரோ?' என்பதையும் கேட்கவேண்டும்.

அவள் இப்படியான முடிவுக்கு வந்துகொண்டிருந்தபோது, அவளைப் பிரிந்திருந்த கணவனும் அங்கு வரும் அரவம் கேட்கிறது. தான் எப்படி வெறுப்போடு அவனோடு நடந்துகொள்ள வேண்டும், என்னென்ன வார்த்தைகளை வைத்து அவனை வையவேண்டும் என்பதையெல்லாம் தயார்படுத்துகிருள். ஆனல்-

என்ன ஆச்சரியம்? அவன் அவன் முன் வந்தபோது— அவள் அவனைக்கண்டபோது அவள் இதுவரை போட்ட திட்டங்களெல்லாம் தேர்மாருக மாறிவிட்டன. அவள் ஓடிச்சென்று அவனை வரவேற்று உபசரிக்கிருள். அன்பு முத்தங்களும் இன்பப் பேச்சுக்களும் ஒருவருக்கொருவர் பரிமாறப்படுகின்றன.

இது எப்படி இருக்கிறதென்ருல் கண்ணுக்கு மை தீட்டும் கோல் இருக்கிறதே அதைக்கையிலே வைத்திருக்கும்போது பார்க்கமுடிகிறது. அந்த கோலை கண்ணிடத்தில் கொண்டுபோய் மை தீட்டும்போது கண்ணுக்குத் தெரிவதில்லை அல்லவா? இப்படித்தான் எட்ட இருக்கும் போது கணவன் செய்துவிட்ட - செய்துவிட்டதாக நினைக்கும் தவறுகளையெல்லாம் அவன் கிட்டவந்ததும் மனைவி மறந்துவிடுகிருளாம்.

எழுதாத நேரத்தில் எழுதுகோலைப் பார்க்க முடிகிறது. அதுபோலவே எட்ட இருக்கும்போது காதலனது தவறுகள் தெரிவதில்லை. அதுபோலவே காதலன் கிட்ட வந்ததும் அவனது தவறுகளை அவள்மறந்துவிடுகிருள்.

இக்காட்சிக்குரிய வள்ளுவரின் குறள் இதோ:-

எழுதுங்கால் கோல்
காணுக் கண்போல்
கொண்கன்
பழிகாணேன் கண்ட
விடத்து

ஃ ஃ ஃ

## பாரதி வாக்கு

அன்புண்டானுல் இன்பமுண்டு என்பதை புத்தபகவான் கண்டு பிடித்துச் சொன்னுர். அந்த யுக்தியின் மகிமையை நேரே மனிதர் தெரிந்து கொள்ளாமல் அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்து வருகிருர்கள். அன்பு கொள்கையில் இருந்தால் போதாது! செய்கையில் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களின் தோற்றமும் விருத்தியும்

(கே. சங்கரஐயர் பி. எஸ். ஸி.)

பூமியின் வயது ஏறத்தாழ 450 கோடி வருடங்களென கணக்கிடலாமென்றும் 300 கோடி வருடங்களுக்கு முன்னரே உயிரினங்கள் பூமியில் தோன்றியிருக்கக் கூடுமென்றும் கூறும் புவியியல், வானியல் ஆராய்ச்சியாளரின் கூற்றை ஏற்றுக்கொள்ளும் இக் கட்டுரையாளர் பூமியில் உயிரினம் எவ்வாறு தோன்றியிருக்கக் கூடுமென்பதையும் விஞ்ஞானக் கண் கொண்டே நோக்குகிறார். இக்கட்டுரை 'அறிவொளி' விஞ்ஞான மாத ஏட்டில் பிரசுரமாகியிருக்கிறது.

உயிர் என்றால் என்ன; அது எவ்வாறு உண்டாயிற்று என்பது எவராலும் கேட்கப்படும் ஒரு கேள்வியே. ஒரு சாரார் உயிரினங்களெல்லாம் ஏதோவொரு சக்தியினால் படைக்கப்பட்டு, அவை தம்மினப்பு மாறுதலையில் இனப்பெருக்கம் செய்துவருகின்றன என்பர். விஞ்ஞானிகளைப் பொறுத்தவரையில் உயிரினங்களெல்லாம் உயிரற்ற சடப்பொருள்களிலிருந்து தோன்றியவையேயாகும். எல்லா உயிரினங்களிலுமுள்ள அடிப்படைப் பொருள் முதலுருவாகும் (protodlasm) முதலுருவிற்கு நிலையான அமைப்புக் கிடையாது. வெவ்வேறு அங்கிகளிலும் (Organisms) அதனியல்புகள் மாறுபடும். நீர், சேதனவுறுப்புச் சேர்வைகள் (முக்கியமாக புரதங்கள், நியூகிளிக்கமிலம், கொழுப்பு, காபோ[illegible]வதரேற்று) உப்புகள் ([illegible]சோடியம் குளோரைட்டு, கல்சியம் காபனேற்று) ஆகியவற்றைக்கொண்ட கலவையே முதலுருவாகும். வளர்ச்சி, அசைவு, உறுத்துணர்ச்சி, இனப்பெருக்கம் ஆகியவையே உயிரினங்களின் சிறப்பியல்புகளாகும்.

பூமியின் வயது ஏறத்தாழ 450 கோடிவருடங்களெனக் கணக்கிடலாம். 300 கோடி வருடங்களுக்கு முன்னரே உயிரினங்கள் பூமியிலே தோன்றியிருக்கக்கூடும். பெரும்பாலான புவிச்சரிதவியலாளரும் வானியலாளரும் பூமி உருகுநிலை அவத்தையிலாடாக (Molten phase) வந்துள்ளதென நம்புகின்றனர். எனவே நாம் இப்பொழுது வாழும் பூமியின் நிலை 300 கோடி ஆண்டுகட்கு முன்னர் இருந்த நிலையிலிருந்து மிக மாறுபட்டதாகும். அக்காலத்தே பூமியின் மேற்பரப்பு இரசாயனத் தாக்கங்கள் நடைபெறும் மிகப் பெரிய கொதி கலம் என விவரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந் நிலையிலேயே நாம் உயிரினங்களின் தோற்றத்தைப்பற்றி ஆராயவேண்டும்.

அசேதனவுறுப்பு முறையில் உண்டான குறிப்பிட்ட சில சிக்கலான சேதனவுறுப்புச் சேர்வைகள் அதிகளவில் இருந்தமையே உயிரினங்களுண்டானதற்குக் காரணமாயிருக்கலாம். வளிமண்டலத்தில் இப்பொழுதுள்ளதுபோல் ஒட்சிசனும் நைதரசனும் 300 கோடி ஆண்டுகட்கு முன்னர் அதிகளவில் இருக்கவில்லை. நீரான், மெதேன் (Methane) அமோனியா போன்றவையே மிகுதியாக இருந்திருக்கக்கூடும். அவற்றுடன் நைதரசனும், காபனீரொட்சைட்டும் வேறு வாயுக்களும் சிறிதளவில் சேர்ந்திருக்கலாம். வேறு கிரகங்களின் வளிமண்டல ஆராய்ச்சியிலிருந்து இதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கிரகங்களிலே பூமியில் நடைபெற்ற மாற்றங்களைவிட மிக மெதுவாக காலத்திற்குக் காலம் மாற்றங்கள் நடைபெறுவனவாயிருக்குமாலாமெனத் தோன்றுகிறது. முதலில் சேதனவுறுப்புக்குரிய மூலக்கூறுகள் அசேதனவுறுப்புப் பொருட்களிலிருந்து உண்டாகியிருக்கலாம். சூரியனிலிருந்து பெறும் சக்தியினாலோ நீர்ச்சுனைகளின் வெப்பத்தினாலோ பல்வேறு இரசாயனச் சேர்க்கைகள் நடைபெற்றுள்ளன. முக்கியமாக அமைனோவமிலங்களையும் காபோவைதரேற்றுகளையும் குறிப்பிடலாம். கடலிலோ, கடல்சார் ஏரிகளிலோ இவற்றின் செறிவு அதிகரிப்பினால் பாரிய மூலக் கூறுகள் (giant molacules) தோன்றியிருக்கலாம். இம்மூலக் கூற்றுக் கூட்டங்கள் ஏதோவொரு பொறிமுறையால் பெருகுகின்றன. இவை நீர் மூலக் கூறுகளைத் தம்மைச் சுற்றி ஏற்படுத்தியிருக்கலாமென்பதற்கு "ஒபரின்" (Oparin) என்பவர் ஒரு பொறிமுறையைக் கூறியுள்ளார். அவர் கூறுவதாவது: மறை ஏற்றம் உள்ள (Negative charge) துளிகள் சேர்வதால் சிக்கலானகூழ்போன்ற வீழ்படிவு (Celloidal aggregate) ஏற்படுகிறது. இவ் வீழ்படிவு தன் பரப்பினூடாக நீரை உறிஞ்சி ஒரு மென் சவ்வுண்டாவதற்கு வழிகோலும் தன்மை பெற்றதாகும். இச்செய்முறை ஏற்படலாமெனக் காட்டுவதற்குச் சில சான்றுகள் பரிசோதனை மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன. மில்லர் என்னும் விஞ்ஞானி மெதேன், அமோனியா, ஐதரசன், நீராவி ஆகியவை மின்னிறக்கத்திற்குள்ளாகும்போது (electrical discharge) பலசிக்கலான சேதனவுறுப்புக்குரிய மூலக்கூறுகள் உண்டாவதைக் கண்டார். புரதம், அமைனோவமிலங்கள் ஆகியவற்றின் அமைப்பைக் கொண்ட பல கூறுகள் அவற்றிலிருந்தன. மூலக்கூற்றுக் கூட்டங்கள் தனித்தியங்குவதிலும் பார்க்க, சேர்ந்து தொழிற்படும்போது அதிகவினைத்திறனுள்ளவையாகும். எனவே, இவை சுற்றில் திரண்டு உயிருள்ள பொருட்களாக விருத்தியடைந்திருக்கலாம். இவ்வாறு ஏற்பட்ட அங்கிகள், தாமுண்டான சேதனவுறுப்புப் பொருட்களையே உணவாகக்கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அதற்கு ஓர் எல்லையுண்டு. எனவே மிகு

(10-ம் பக்கம் பார்க்க)

# குழந்தையின் பிறப்பில் கிரகங்களின் ஆதிக்கம்

— கா. வ. சிவப்பிரகாசன் —

இயற்கையின் விந்தைதான் என்னே! வானத்து நட்சத்திரங்கட்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பு தான் என்ன? ஒரு குழந்தை ஜெனனமாகும்பொழுது அந்த நேரத்தில் வானமண்டலத்தில் கிரகங்கள் கொண்டுள்ள நிலை, பிள்ளையின் எதிர்காலத்தைக் காட்டும் படமாயமைந்துவிடுகின்றது. இச்சோதிட சாஸ்திரத்திற்குப் பராசரர், வசிஷ்டர், பிருகு முதலிய முனிவர்கள் இலக்கணம் அமைத்துச் சோதிடக் கலைக்கு மெருகூட்டிவிட்டனர். சோதிட மேதைகள் பலர் அவ்வப்போது தோன்றி ஆராய்ச்சியின் மூலம், சோதிடக் கலையை வளர்த்தார்கள். பேராசிரியர் சூரியநாராயணராவ், பராசரர் அளித்த சோதிட இலக்கண ஏடுகளைக் கூடுமானவரை ஒன்று சேர்த்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சோதிட உலகிற்கே தீபம் ஏற்றி வைத்தமை ஒரு குறிப்பிடக்கூடிய அம்சம்.

வாழ்க்கையில் ஒருவருக்கு நடக்கும் இன்பதுன்பங்களை, அவரின் ஜெனன ஜாதகத்திலிருந்து இலகுவில் அறிந்துகொள்ளலாம். ஒரு பிள்ளையின் ஜெனன ஜாதகமும் அதன் பிதாவிற்கோ, அன்றி மாதாவிற்கோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடக்கும் கெடுதலையோ, நன்மையையோ படம்பிடித்துக் காட்டிவிடுகின்றது.

ஒருவருக்கு நடக்கும் பலனைச் சரிவர அறிவதற்கு, அவரின் ஜெனன ஜாதகம் பிழையின்றி, மிக நுட்பமாகக் கணிக்கப்படல் வேண்டும். கிரகங்களின் பாகை, கலை முதலிய விபரங்களோடு கணிக்கப்படும் இத்தியர் 'நிரயன' முறை, சோதிட சாஸ்திரத்திற்கே பெருமை அளித்துவிடுகின்றது. இக்கணித முறையினுற்றான், கிரகங்களின் பலம், தன்மை ஆகியவற்றை சரிவரப் புரிந்துகொள்ள முடிகின்றது.

உங்கள் கவனத்திற்குப் பத்தொன்பதாவது வயதிலே தமது பிதாவை இழந்த ஒருவரின் ஜாதகம் கீழே கொடுக்கப்படுகின்றது. ஒன்பதாவது வீட்டைக்கொண்டுதான் பிதாவின் பலனை அறிவது. ஒன்பதாதிபதி சனி இருதீய (Malefics) கிரகங்கள் சகிதம் இலக்கினத்திருப்பதைக் கவனியுங்கள். மேலும்

| | | | |
|---|---|---|---|
| | | | ல சனி செ ரா |
| | இராசி | | |
| பு சு ஞ | | | |
| கே சந் | | வி | |

பிதுர்காரகன்சூரியன்பகைப் பெற்று அட்டமத்தில் நிற்பதுவும், இலக்கினத்துள்ள தியகோன் செவ்வாயினுல் தாக்கப்படுவதும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். பிதா மரிக்கும் பொழுது, செவ்வாய் மகாதிசை சனி புத்தி, இச்சாதகருக்கு நடந்து கொண்டிருந்தது.

அடுத்து ஒருவருக்குரிய தொழில்பற்றிச் சிறிது ஆராய்வோம். பத்தாமிடமாகிய கர்மஸ்தானத்தைக் கொண்டுதான் ஒருவரின் தொழில்நிச்சயித்தாகவேண்டும். இளமையதில் கஷ்[illegible]பவித்த ஒரு ஆசிரியரின் ஜாதகத்தைக்கீழே தருகிறேன். இச்சாதகருக்குத் தற்பொழுது வயது 29 வருடம்

| | | | |
|---|---|---|---|
| சனி வெ | ஞ பு | கே | ல சந் |
| | இராசி | | |
| வி | | | |
| | செ ரா | | |

4 மாசம். இவர் வியாழன் மகாதிசை சேஷம் 15 வருடம் 2 மாசம் 19 நாளிருக்கப் பிறந்தார். வியாழன் அட்டமத் தானத்தில் நிற்பதும் இலக்கினதிபதி தீயகோள்களிற் கிடையில் நசுக்கப்படுவதும் Hemmed in Between Malefics) கவனிக்கப்பட வேண்டியவிஷயம். இச்சாதகரின் 10வது வீடு வியாழனின் ஆட்சி வீடு. ஐந்தாதிபதியும், ஒன்பதாதிபதியும் அதில் நிலைகொண்டுள்ளனர். இலக்கினத்துள்ள சந்திரன் வியாழனின் நட்சத்திரமாகியபுனர்பூசத்தில் நிற்கின்றது. புதன் வெள்ளியின் நட்சத்திரமாகிய பரணியில் நிற்கின்றது. பொதுவாக வியாழன் குருத் தொழிலையும், புதன் கணிதத்துடன் சம்பந்தப்பட்டதொழில் ஆசிரியத் தொழில் ஆகியவற்றையும் குறிக்கும். எனவேசனிதிசை சந்திரன் புத்தி இவரை ஆசிரியத் தொழிலில் புகுத்திவிட்டது. பத்தாவது வீடு ராகுவின் பார்வைக்குள் அமைவதால், இச்சாதகருக்குச் சனிதிசை ராகுபுத்தி, ஆசிரியத் தொழிலில் பாரிய உயர்ச்சியை அளித்துள்ளது. பாவசக்கரம் கணித்துப்பார்த்தபொழுது பத்தாமிடத்தில் வெள்ளி தனியே நிலைகொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது. ஜாதகரை, சித்திரம், நாட்டியம், நடிப்பு, சங்கீதம் முதலிய [illegible] நாட்டங் கொள்ளச் செய்து விட்டன.


பெற்றோர்களே!! மாணவர்களே!!

- தேர்ந்தெடுத்த அறிவியற் கட்டுரைகளுக்கு,
- ஈழத்தின் சிறந்த விஞ்ஞானப் படைப்புகளுக்கு,
- இலகு தமிழில் பாடப் பொருளை விளக்கும் துணை நூலுக்கு

அறிவொளி

( ஈழத்தின் விஞ்ஞான மாத இதழ் )

- வெளியிடுவோர்:

தமிழில் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கான நிறுவகம்

சந்தா விபரம்

தனிப் பிரதி 60 சதம்
ஆண்டுச் சந்தா ரு. 7—00

தொடர்புகள்:
செயலாளர்
"அறிவொளி"
35/9, யோசேப் ஒழுங்கை
கொழும்பு-4.





முதற்பல் முளைப்பதற்கு
முன்னமே
உங்கள் செல்வனுக்கு
வேணடியது
அலன்பெரீஸ்
மால்ட்டெட் றஸ்க்
இலங்கை ஏஜென்டுகள்
மாக்வூட்ஸ் லிமிட்டெட், த. பெ. 91, கொழும்பு. 224/65


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காட்சி—3

கம்பன் கழக நாடகப் போட்டியில் தேர்வு பெற்ற ஓரங்க நாடகம்

# இராவணன் கட்டளை

இடம்: கும்பகர்ணன் போர்ப்பாசறை.

பாத்திரம்: கும்பகர்ணன், விபீடணன்.

நிகழ்ச்சி: கும்பகர்ணன் விபீடணனைத் தழுவுதல்.

வீபீடணன்: அண்ணா ...

கும்பகர்ணன்: தம்பி ... இறக்கப்போகும் என்னிடம் ஏன் வருகின்றாய்? இராமனிடம் சிறப்பும் பெற்று அபயம் பெற்ற நீ என்றென்றும் இன்பமுடன் வாழவேண்டுமடா! ஏன் என்னிடம் தனிமையில் வந்தாய்... காலம் தாழ்த்தாமல் கார்க்கோல மேனியானிடம்செல். நான் போர்க்கோலங்கொள்ளப் போகின்றேன்."

வீபீடணன்: அண்ணா! அப்படிச் சொல்லாதீர்கள்! பாசம் என் நெஞ்சைக் குடைகின்றது... அன்புக்கயிறு என் நெஞ்சை சுற்றிச் சுழலுகின்றது... அண்ணா உன்னை விட்டு நான் எப்படி இராமனிடம் செல்வேன்...

கும்பகர்ணன்: கல்வியிற் பெரியவனான நீ கசடறக் கற்ற நூல்களை மறந்துவிட்டாயா? நீ இராமனிடம் பெற்ற சீரும் சிறப்பும் என் நெஞ்சை மகிழ்விக்கின்றனவடா! காலத்தின் கோலத்தால் நாம் அழியும் போது அறிவுள்ள நீயும் எம்மோடு சேர்ந்து அழிய வேண்டுமா? ...நஞ்சை உண்ணாது அமுதினை உண்டு நானிலம் போற்ற வாழடா, தம்பி.

வீபீட: புலத்தியர் வழியில் பிறந்த நாம் ஏனண்ணா பிரிந்து நின்று எம் பலத்தினை இழக்க வேண்டும்... இதயம் உங்களுக்கு கல்லாகி விட்டதா?

கும்பகர்: தம்பி! அபயம் என்றடைந்த உன்னை அறக் காவலரான இராமலக்குமணர் என்றுமே கைவிடமாட்டார்கள்! அவர்களால் தானடா புலத்திய முனிவரின் வம்சக்கொடியே மீண்டும் தழைக்கப் போகின்றது.... இறப்பினை ஒழித்து என்றென்றும் இன்பமுடன் நீ வாழவேண்டுமடா!

வீபீடணன்: அண்ணா! பாசம் என்னைக் கொல்லாமல் கொல்லுகின்றது... உங்கள் உள்ளத்து உறுதியை நினைக்க வேதனை இரத்தக் கண்ணீராய்க் கொட்டுகின்றது... அண்ணா! எம்மினத்துக்கு வந்த பழியை நினைக்கத்தான் வேதனை அலைகள் நெஞ்சிலே விம்முகின்றன, அண்ணா!

கும்பகர்: இது ஆண்டவனின் அழகான தீர்ப்படா! பிறர் மனைவி நயந்த எமக்கு இறப்பில்கூட நிம்மதி கிடைக்காதடா. குணக்குன்றான உனக்கு என்னைப்போல் அரக்ககுணம் வந்துவிட்டதா? இராமராவணப் போரில் நீ பாசத்திற்கு இரையாகக்கூடாது...போ... போய் அயோத்திக்குமாரனை வணங்கி அழிவற்ற ஆயுளையும் அறிவையும் செழிப்பான செல்வத்தையும்பெற்றுச் சிறப்புடன்வாழடா..."

வீபீட: அண்ணா! நான் செல்வமும் செல்வாக்கும் அரசும் பெற அண்ணல் இராமனிடம் செல்லவில்லை ... அகில மகா ஜோதி நீதி தேவன் நாமம் நிலமிசையே நிலைநாட்டப் படவேண்டுமென்றுதான் இராமனை அடைந்தேன் ... அண்ணாவுக்கு அறிவுரையும் கூறினேன்...ஆனால் அழிவு உன்னைப் பின்தொடர்வதை நினைத்தே உன்னிடம் ஓடோடிவந்தேன்.

கும்பகர்ண: தம்பி, நான் இறந்தாலும் நானே நமது இனம் நலமுடன் வாழ வேண்டுமென்று கூறுகின்றேன்...நீஎம்முடன் சேர்ந்து இனத்தோடு இனமாகி மண்ணில் மாள நாளை இறப்புக் கடனுக்கு எள்ளும் தண்ணீரும் இறைக்க யாரடா எஞ்சப் போகிறார்கள்...சொல்... ஏன் மௌனம்... அதனால்தான் உன்னிடம் சொல்கிறேன்...இராமனிடம் நேராகச் சென்று போரொழிந்து இலங்காபுரி மணிமன்னனாக வாழ வேண்டுமடா ... நிற்காதே போய்விடு ...படைகள் போருக்குத்தயாராகின்றன.

## "நல்லை அமிழ்தன்,"

வீபீட: இருளில் மூழ்கும் எமது அரக்க வாழ்வு என்றும் அருவென்பதை அறியாது அவலமுறும்இவ்வேளையில் வீரத்தின்எழில்பொருந்திய நீ ஏனண்ணா இராமனை அடைந்து நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பெறக் கூடாது.

கும்பகர்: தம்பி நீ என்னை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ளவில்லையடா... என்னை அழித்தாகுதல் என் அண்ணா இதயத்தில் தருமத்தின் நீரைப் பெருக்கலாமென்றுதான் இக்களத்தில் போருக்குக் குதித்திருக்கிறேனடா.

வீபீட: சுற்றமும் சுகமும் விட்டு கொற்றவன் இராமனை நீயடைந்தால் ...எனக்குக் கிடைக்கும் இலங்கை அரசு உனக்குக் கிடைப்பதுடன் உலகமேஉன்னை தர்மத்தின் தலைமகன் நீதியின்தெய்வம் என்று போற்றுமே அண்ணா. இராமன் ஒருதெய்வம். அவனை நீ அடைந்தாயானால் எம் குலமே தழைத்துக் கிளைவிட்டு தரணியிலே சிறப்படையுமண்ணா, தருமத்தின் வழியில் நீ இராமனை அடைந்தால் அண்ணனைவிட்டு தம்பிபிரிந்தான் என்ற அவச்சொல் உன்னைத் தொடரவே தொடராது! பரசுராமன் கதையைநினைத்துச் சிறிதே சிந்தித்துப்பார் அண்ணா...

கும்பகர்: பழிபொருளன் செய்த பாவத்தை இன்னொருவன் அனுபவிப்பது நீதியல்ல.... ஆனாலும் சோறு படைத்து என்னை ஏறுபோல் வளர்த்த அண்ணாவுக்குநான் துரோகம் செய்யவேமாட்டேன்...

வீபீடண: அண்ணனைக் காப்பதற்கு அறத்திலும் வழியில்லை. ஆகவே அகில உலகமும் நாம் இராமனைச் சேர்வதில் பழியில்லை என்றே புகலும். விண்ணை வென்ற நீ மண்ணில் கண்ணை விரும்பி கண்ணமூடித் துயில் புரிந்து இளமையை பலியிட்டு விட்டாய்... இனிமேலும் சுகமுடன் வாழ வேண்டுமானால் இராமனை அடைந்துவிடு! வீணாகப் போரிலே நீ இறந்தபட தேவர்கள் அதைப்பார்த்துச் சிரிக்கும் இழிவை எனக்கு ஆக்கிவிடாதே அண்ணா.இராமன்என்றும் உன்னைச்சிறப்புடன் வாழவிடுவான் இலங்காபுரி உன் எழிலாட்சியில் பூத்துக் குலுங்கும் பொலிவொழிக்கும் பூமியாகத் திகழும். அப்போதுமூன்றுலகத்தாரும் எம்மை வணங்க எம் சுற்றமே பெருமைப்படும் அண்ணா. உன் வீரத்தால் உன் உள்ளத்தால் எமது குலமேஉய்யவேண்டும். இராமனை இப்பொழுதே சேர்ந்துவிடு. சேர்வதால்கடவுளர் கருணையும், முனிவர்கள் ஆசியும் பெற்று நீடூழி வாழ்ந்து நிமலன் அருளைப் பெறலாம்அண்ணா. நீ என்னை பிழந்து போரிலே இறந்து விடாதே. அண்ணா (விபீடணன் வீழ்ந்து வணங்குதல்).

கும்பகர்ணன்- தம்பி! உனக்கு மிகமிக அற்ப ஆசை! உனது பொன்மொழிகளையும், புகழ்மொழிகளையும் என் மொழிகளாக்கி இதயத்தால் மகிழ்வடைகிறேன். ஆனால்...

விபீட- ஆனால்என்னண்ணா! இதயத்தைத்திறந்து விளக்கமாகக்கூறுங்கள்

கும்பகர்ணன்-தம்பி! நீர்க்கோல வாழ்வை நினைத்து நீண்டநாள், தாயாகித், தந்தையாகி தமயனாகி வளர்த்துப் போர்க்கோலம் செய்துவிட்ட இராவணேஸ்வரனுக்கு என்இதயம்என்றுமே துரோகம் செய்யாதடா! எமதுகுலம்தழைத்துதருமம் காக்கப்படவேண்டுமானால்நீ இராமனிடம்போ; இராமனுடனே நில்; அப்போதுதான் என் மனம் சாந்தியடையுமடா!

விபீடண- அப்படிச்சொல்லாதீர்கள் அண்ணா! நீங்கள் இராமனை அடைந்தால் நித்திய வரம்பெற்று நீடூழி வாழ்ந்து தருமத்தின் காவலன் என்ற பெயரையேபெறலாம் அண்ணா!

கும்பகர்- சோற்றுக்கடன் என்னை வதைக்கும்போது எப்படியடா இராமனையடைவேன்! அண்ணனைத் திருத்த முயன்றேன்! திருத்த முயன்று தோல்விகண்டேன்! இனி நான் திரும்ப முடியாதஇடத்திற்கு பயணமானபின் அண்ணா ஒரு துளி கண்ணீர் வடித்தால் அதுவே என் ஆத்மாசாந்தியடையும் அமுத...தமடா?

(அடுத்...வாரம் முற்றும்)

---

## சிறுவர்  பூங்கா

**தொடர் கதை** (ஆங்கில மூலம்: டால்ஸ்டாய்)

## சிறுபொறியும் வீட்டை எரிக்கும்

— திருமதி அ. மயில்வாகனம் —

ஐவனுடைய குடும்பம் இரவில் உடைகளுடன்தப்பி விட்டது. மற்றப்பொருள்களில் அவனுடைய கிழத் தந்தையை மட்டும் காப்பாற்ற முடிந்தது. வயல்களுக்குத் துரத்திவிடப்பட்ட குதிரைகளைத்தவிர மற்றெல்லாம்தீக்கிரையாகி விட்டன. மந்தைகள், கோழிக்குஞ்சுகள், கலப்பைகள், வண்டிகள், பெண்களின் உடைப் பெட்டிகள், தானியங்கள்- எல்லாம் எரிந்துவிட்டன.

கேபிரியல் வீட்டுமந்தைகளும் சில பொருள்களுங்காப்பாற்றப்பட்டன.

இரவு முழுவதும் தீஎரிந்து கொண்டு இருந்தது. ஐவன் வீட்டுக்கு முன்னே நின்று, இதென்ன நண்பர்களே, வீட்டுக்கூரையில் இருக்கும் நெருப்பை இழுத்து அடித்து அணைப்பதுதானே!' என்று ஓலமிட்டுக்கொண்டு இருந்தான். வீட்டுக்கூரை உள்ளே விழ்ந்த பொழுது, ஐவன் எரிந்துகொண்டிருந்த வீட்டுக்குச் சென்று, அரைவாசி எரிந்த நாற்காலி ஒன்றை எடுக்கப்போனான்.பெண்கள் அவனைக் கூப்பிட்டார்கள். ஆனால் அவன் வேறுமோர் கதிரையை எடுக்க உள்ளே போனபோது கால்தடுக்கி நெருப்புக்குள் விழுந்து விட்டான். அவனுடைய மகன் அவன் பின்னே சென்று அவனை வெளியே இழுத்து விட்டான். ஐவனுடைய தாடி, கேசம், துணி முதலியன எரிந்துவிட்டன. அவனுடைய கைகள் அவிந்து கறுப்பாகிவிட்ட போதும் அவனுக்குஒன்றும்தெரியவில்லை. 'துக்கத்தினால் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது', என்றுசனங்கள் பேசிக் கொண்டார்கள். நெருப்பு எரிந்து கொண்டிருந்தது, ஐவன் முன்போலவே, 'இதென்னநண்பர்களே!...' என்று கசிக்கொண்டு இருந்தான்.

காலையிலே கிராமத்தலைவனின் மகன் ஐவனைத்தேடி வந்தான். 'ஐவன், உன் தகப்பன் இறந்துகொண்டு இருக்கிறார்! உன்னைப்பார்க்க வேண்டுமாம்!

ஐவன் தந்தையை மறந்து விட்டான், பையன் சொன்னவை ஒன்றும் அவனுக்கு விளங்கவில்லை.

'என்ன தந்தை?' என்று கேட்டான். 'யாரை வரும்படி அழைத்தார்?' என்று கேட்டான்.

'உன்னைத்தான், சாகுந்தறுவாயிற் காண வேண்டுமாம், அவர் எங்கள்வீட்டிற்தான் இறந்துகொண்டு இருக்கிறார். 'வா, ஐவன்', என்று கூறி அவன் கையைப் பிடித்து இழுத்தான், கிராமத் தலைவனின் மகன்.

வீடு எரிகிறபோது கிழவன் மீது வைக்கோல் விழுந்து அவனையும் எரித்துவிட்டது, கிராமத்திலிருந்து தூரத்திலே இருக்கும் தலைவன் வீட்டுக்கு அவன் கொண்டு போகப்பட்டான்.

ஐவன் தகப்பனிடம் சென்றபோது, தலைவனின் மனைவி மாத்திரம் இருந்தாள், சிறு பிள்ளைகள் சிலர் அடுப்புப்பரண்மீது இருந்தனர். ஏனையோர்நெருப்பெரியும் இடத்திற்குச் சென்றுவிட்டனர். கிழவன் மெழுகுவர்த்தி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு கதவுப் பக்கமாகக் கண்களைத் திருப்பிக் கொண்டு இருந்தான். மகனைக் கண்டதும் சற்று அசைந்து தன்கிட்ட வரும்படி அழைத்தான்.

ஐவன் நான் உனக்குஎன்ன சொன்னேன்? கிராமத்தை எரித்தது யார்?

'அது கேபிரியல் அப்பா, நான் அவன் நெருப்பு வைத்ததைக் கண்டேன். நான் உடனேயே நெருப்பை அணைத்திருந்தால் இப்படி ஒன்றும் நடக்கமுடியாது.'

'ஐவன், நான் இறக்கப் போகின்றேன், உன்னுடைய முறையும் வரும். குற்றம் யாருடையது?'

ஐவன் மௌனமாகத் தகப்பனைப்பார்த்தான்; அவனால் பேசமுடியவில்லை.

'கடவுள் முன்னிலையில் யார் பிழை செய்தது? நான் உனக்கு என்ன சொன்னேன்?'

ஐவன் தன் உணர்வு பெற்றவனாய் எல்லாவற்றையும் விளங்கிக்கொண்டான். "அப்பா! நான் பிழைசெய்தேன், என் பிழையை மன்னியுங்கள். உங்களுக்கும் கடவுளுக்கும் நான் பிழை செய்தேன், என்னை மன்னியுங்கள் என்று வேண்டினான்.

வலக்கையில் இருந்த மெழுகுவர்த்தியை இடக்கைக்கு மாற்றினான் கிழவன், வலக்கையால்சிலுவை அடையாளம் போடத்தெண்டித்தான். ஆனால் அவனால் முடியவில்லை.

'கடவுளைத் துதி! கடவுளைத் துதி!' என்று சொல்லிவிட்டு மறுபடியும் கண்களை மகன் மேற் திருப்பினான்.

'ஐவன், என் மகனே ஐவன்!'

'என்ன அப்பா?'

'இப்போ நீ என்ன செய்ய வேண்டும்?'

ஐவன் அழுதுகொண்டிருந்தான்.

'அப்பா! இனிமேல் நாம் எப்படிச் சீவிப்பதென்று எனக்குத் தெரியவில்லை அப்பா!' என்று துக்கத்துடன் மொழிந்தான்.

கிழவன் கண்களை மூடிக் கொண்டு சில நிமிஷங்களு... [illegible] ...ல வார்த்தைகளைப் பேசுவதற்கான தைரியத்தை வரவழைக்க முயன்றான். பின்னர் கண்களைத் திறந்து, நீ சரியாக நடப்பாய், கடவுளின் ஆணைக்குப் பணிந்து நடந்தால் எல்லாம் தானே சரியாகிவிடும்! பின்னர் நிறுத்திவிட்டுப் புன்முறுவலித்துக் கொண்டு, 'ஐவன், நினைத்துப் பார், யார்யார்நெருப்பு வைத்தது என்று சொல்லாதே. இன்னொருவனுடைய பிழையை மறைத்தால், கடவுள் உன்னை இருமுறை மன்னிப்பார்' இவ்வாறு கூறிவிட்டு மெழுகுவர்த்தியை இரு கைகளிலும் எடுத்துக் கொண்டு, அவயவங்களை நீட்டி, ஆழமாக மூச்சுவிட்டு இறந்து போனான்.

ஐவன் கேபிரியலுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை. நெருப்பு எப்படி உண்டாயிற்று என்று எவருக்கும் தெரியாது.

கேபிரியலின் எதிரியான ஐவனுக்கு கோபந் தணிந்துவிட்டது. அவன் ஏன் தன்னைப் பற்றி எவருக்கும் சொல்லவில்லை என்று கேபிரியல் ஆச்சரியப்பட்டான். ஆரம்பத்தில் கேபிரியல்பயந்திருந்தானாயினும், பின்னர் அவன்சாதாரணமாய்ச்சிரிக்கத்தொடங்கினான். எதிரிகள் சண்டைசெய்வதை நிறுத்தியதும், அவர்களுடைய குடும்பங்களும் நிறுத்திக்கொண்டன. புதிய வீடுகள் கட்டப்படும்போது, இரு குடும்பங்களும் ஒரு வீட்டில் வசித்தனர். கிராமம் மறுபடியும்உண்டானபோது இருவரும் தூரவிலகிச் செல்லாது முன்னர்போல அயலவர்களாக இருந்தார்கள்.

நல்ல அயலவர் எப்படிச் சீவிக்கவேண்டுமோ அப்படிச் சீவித்தார்கள். ஐவன், கடவுளின் கட்டளைப்படி நடக்க வேண்டும் என்று கூறிய தந்தையின் வேண்டுகோளை ஞாபகப்படுத்தி, சிறுபொறியாக இருக்கும்போதே நெருப்பை அணைத்துவிட வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டான். யாராவது அவனுக்குத் தீமை செய்தால், பதிலுக்குத்தீமை செய்யாது சமாதானம் செய்யமுயற்சிப்பான். யாராவது ஆணையிட்டால், தீய சொற்களைப் பாவிக்கக்கூடாதென்பதை அவர்களுக்குக் கற்பிப்பான், அவ்விதமே தன் குடும்பத்தினருக்கும் அறிவுறுத்துவான்.

இப்பொழுது மறுபடியும் ஐவன் முன்னரிலும் பார்க்க மகிழ்ச்சியுடன் சீவிக்கிறான்.

(முற்றும்)

---

## பாரதி வாக்கு

எங்கிருந்தோ வந்து இவ்வுலகத்தில் சில நாள் வாழ்கிறோம். செத்த பிறகு நம்முடைய கதி என்ன ஆகுமோ? கடவுளுக்குதான் தெரியும். மூன்றே முக்கால் நாழிகை உயிர் வாழ்வது சந்தோஷத்துடன் இருந்துவிட்டுப் போகக்கூடாதா? அடடா இந்தப் பூமியில் மனித உயிர்க்கு எத்தனை கஷ்டம், எத்தனை பயம், எத்தனை இடையூறு, எத்தனை துரோகம், எத்தனை பொய், எத்தனை கொடுமை, எத்தனை அநியாயம், ஐயோ பாவம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உயிரினங்களின் தோற்றமும்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாகக் கிடைக்கப் பெறும் அசேதனவுறுப்புப் பொருட்களிலிருந்து சேதனவுறுப்புப் பொருட்களைத் தொகுப்படையச் செய்யுந்தன்மை திடீர் மாற்றத்தினால் (mutational change) உண்டாகியிருக்கலாம். பின்னர் அதிலிருந்து ஒளித்தொகுப்பு விருத்தியடைந்திருக்கலாம். இதற்கு காபனீரொட்சைட்டு அவசியம். ஒளித்தொகுப்பின் போது ஒட்சிசன் உண்டாகிறது. இதனால் முன்னர் நடைபெற்ற காற்றின்றிய சுவாசித்தலுக்குப் பதிலாக (anaerobic respiration) இப்பொழுது காற்றுள்ள சுவாசித்தல் (aerobic respiration) விருத்தியடைந்ததோடல்லாமல் வளிமண்டலத்திலும் ஓசோன் எனும் வாயுவின் படை (Layer of zone) உண்டாகிறது. முன்னர் பூமியிலே மிகுதியாகப் பாய்ந்த வன்மையான புறஊதாக் கதிர்களிலிருந்தும் (ultra vi let radiation) ஓசோன்படை பூமியைப் பாதுகாப்பதோடல்லாமல் கட்புலனாகும் ஒளியைக் (visible light) கடத்தியது. இவ்வொளி மிகமுக்கியமான சக்தியாக அமைந்தது. இம் மாற்றங்களெல்லாம் நாம் இப்பொழுது இருக்குஞ் சூழலை விட மிக மாறுபட்ட பழமையான சூழலிலேயேற்பட்டனவென்பதை நினைவு கூருதல் வேண்டும்.

தாவரங்களிலேயும் விலங்குகளிலேயும் ஏற்படும் சில நோய்களுக்குக் காரணமாயிருக்கும் அங்கிகள் எளிய தாவரங்களோ அல்லது விலங்குகளோவெனக் கூறமுடியாமலுள்ளது. உருவ[illegible]தில் அவை பற்றீரியாக்க[illegible] விட மிக நுண்ணியவையாகும். எந்தவிதமான மிக நுண்ணிய வடிகட்டிகளினூடாகவும் அவை சென்றுவிடுகின்றன. அவையே வைரசுகள் (viruses) எனப்படுபவை. அவற்றின் அமைப்பு, புரதங்களைப் போன்றதாகும். கரைசல்களிலிருந்து அவற்றைப் பளிங்குகளாக்கமுடியும். இப்பளிங்குகள் மீண்டும் கரைக்கப்பட்டபொழுது அவை உயிருள்ள இழையங்களிலே நோய்தொற்றுவதற்கு ஏதுவாக இருக்கின்றன. ஒரு காலத்தில் அவை சடப்பொருள்களுக்கும் உயிரினங்கட்குமிடையேயான இணைப்பெனக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது பெரும்பாலான வைரசுகள் ஒரு புரதக் கவசத்தினுள் நியூக்ளிக் கமிலத்தைக்கொண்ட (RNA அல்லது DNA) சிறுதுணிக்கைகளென அறியக்கிடக்கிறது. இவ்வகையில் வைரசுகள் உயிரினங்கள் உண்டான கலங்களின் பகுதிகளை ஒத்துள்ளன. வைரசுகள் சுயாதீனமான வாழ்க்கையை நடத்தக்கூடியனவல்ல. ஓர் அங்கியின் அகத்தேமட்டுமே அவற்றால் பெருக முடிகிறது எனவே தற்பொழுது மேற்கூறிய காரணங்களாலும் வேறு பல காரணங்களாலும் வைரசுகள் உயிருள்ள அங்கிகளிலிருந்துண்டான பெறுதிகளென்றே கணிக்கப்படுகின்றன

ஆகவே எமக்குத் தெரிந்த முதல் தோன்றியிருக்கக்கூடிய உயிரினங்கள் பற்றீரியாக்களேயாம் சில சுயாதீனமான பற்றீரியாக்கள் குளோரோபில் (பச்சையம்) இல்லாமலே ஒளித்தொகுப்பு நடாத்துகின்றன! அவை வேறு நிறப்பொருட்களை உபயோகிக்கின்றன. வேறுசில பற்றீரியாக்கள் நைதரசன், கந்தகம், இரும்பு ஆகியவற்றின் உப்புகளை ஒட்சியேற்றமடையச்செய்து அதனாற் கிடைக்கும் சக்தியை உபயோகிக்கின்றன. இவை அமோனியாவை நைதரேற்றுக்களாகவும் ஐதரசன் சல்பைட்டை ஒட்சியேற்றி அப்பொழுது விடுபடும் சக்தியின் உதவியினால் சல்பேற்றுகவும் காபோவைதரேற்றுகளைத் தயாரிக்கின்றன. இந்த ஆதியான பற்றீரியா போன்ற இனங்களிலிருந்து பச்சிலையம் உள்ள அங்கிகள் காலப்போக்கில் உண்டாகினவெனலாம். தாவர இராச்சியமும் விலங்கிராச்சியமும் ஆதிகாலச் சவுக்குமுளை உயிரினங்களிலிருந்து உண்டாயினவெனக் கூறுவதற்குச் சான்றுகள் உள. சில சவுக்குமுளை இனங்கள் இடப்பெயர்ச்சிக்கு உபயோகப்படுத்தப்படும் சவுக்குமுளையை இழந்து, வட்ட வடிவமாகி அல்கா (Alga) எனப்படும் தாவர இனங்களாக விருத்தியடைந்துள்ளன அனேக பச்சையமுள்ள சவுக்குமுளை இனங்கள் இனப்பெருக்கத்தின்போது இது போன்ற நிலையடைகின்றன வேறு சில சவுக்குமுளையினங்கள் பச்சையத்தையிழந்து முற்றாக விலங்கினங்களாக மாறி உணவைப் பிடித்து உண்பவையாக விருத்தியடைந்துள்ளன. இவற்றிலிருந்து பல்வேறு வகையான தாவரங்களும், விலங்குகளும் காலத்திற்குக் காலம் சூழ்நிலைக்கேற்ப வேறுபாடடைந்து கூர்ப்படைந்து வந்துள்ளன.

---

உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே நான் என்ற பாரத்தை நீக்கிவிட்டு உழைத்தால் வேலை இறுகிறுவென்று வேகமாகவும் பிழையில்லாமலும் நடக்கும். தன்னைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும். —பாரதி வாக்கு.


## யாழ் நகரிலே ஓர் புரட்சி!

நீங்கள் தரும் காப்பிக் கொட்டையை உங்கள் முன்னிலையிலேயே நவீன இயந்திர சாதன மூலம் வறுத்து, அரைத்து நறுமணம் கமழும் காப்பித் தூளாக உங்களுக்களிக்கிறோம்

★ மணம் குணம் நிறைந்த தரமிக்க காப்பித்தூளா?
★ வீட்டுப் பாவனைப்பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களா?
★ பலசரக்கு வகையறுக்களா?
★ பீங்கான், எனாமல் பொருட்களா?
★ மா வகையறுக்களா?

இவை யாவற்றையும் ஒரே இடத்தில் குறைந்த விலையில் கூடிய தாராதரத்துடன் பெறுவதற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

## முகமதலி அப்துலலி

( சி. டபிள்யூ. ஈ. பொருட்கள் விற்பனையாளர் )

தந்தி: 'சைபீ' போன்: 515 நம். 5 & 7. பெரிய கடை, யாழ்ப்பாணம். 1347






## றம்பகோல்

கக்குவான் இருமலுக்கும்
மற்றும்
சகலவிதமான இருமல்களுக்கும்

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது
கிடைக்குமிடம்:
ஓ. டி. எஸ். லிமிடெட்.,
கொழும்பு-8.


# 'குழந்தைகளிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்'

—சாந்தி அடிகள் —

'விவேகம், குழந்தைகளின் வாயிலிருந்துதான் வருகிறது' என்று ஏகநாதர் சொன்னரே அதைவிடச் சிறந்த உயர்ந்த உண்மையை அவர் ஒருபோதும் கூறியதில்லை. இதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என்னுடைய சொந்த அனுபவத்திலேயே சூதும் வாதும் கொஞ்சமுமில்லாத பணிவுடன் நாம் குழந்தைகளை அணுகுவோமாயின் அவர்களிடமிருந்து விவேகத்தைப் பெறலாம் என்பதை நான் கவனித்திருக்கிறேன்.

உலகத்தில் நாம் உண்மையான அமைதியைக் காணவேண்டுமானுல், போரை எதிர்த்து உண்மையான போரை நடத்தவேண்டுமானுல், குழந்தைகளிடமிருந்தே அதைத் தொடங்க வேண்டும். அது மிக உண்மை. அவர்களுடைய இயல்பான சூதுவாதற்ற தன்மையுடன் அவர்கள் உயர்ந்தால், வீணான ஒரு பயனுமில்லாத தீர்மானங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் நமக்குக் கொஞ்சமும் இராது. இறுதியில் உலகின் நான்கு மூலைகளிலும் அன்பும் அமைதியும் பாயும். இந்த அன்புக்காகவும் அமைதிக்காகவும்தானே உலகம் முழுவதும் அறிந்தோ அறியாமலோ தணியா வேட்கையுடன் பாடுபட்டுக்கொண்டிருக்கிறது.

## ஆசிரியர்கள் கடமை

குழந்தைகளை நன்கு புரிந்து அவர்களுடைய தனித்தன்மையை உணர்ந்து அவர்களிடமுள்ள சிறந்த திறமையை வெளிக்கொணரக் கூடியவர்களாக ஆசிரியர்கள் இருக்கவேண்டும். அதிதுடன் குழந்தைகள் தங்கள் சொந்தப் பணவசதியில் சுயமரியாதையை இழக்காமலே கல்வி கற்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு எங்கள் நாட்டில் ஆசிரியர்கள் தாங்களாகவே முன்வந்து அளிக்கும் சேவையையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது.

நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு ஏன் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு என்றும் சொல்லலாம்-குழந்தைகளைப்பற்றி எனது அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன், என்னை நம்புங்கள்- உங்களையும் என்னையும் விட ஆழமான சுயமரியாதை உணர்ச்சி இருக்கிறது. நாம் போதிய பணிவுடனும் அடக்கத்துடனும் செல்வதாயின் வாழ்க்கையின் மிகப் பெரிய பாடங்களையெல்லாம் வயதான படித்த மனிதர்களிடமல்லாது அறியாதவர்கள் என்று கூறப்படும் குழந்தைகளிடமே கற்றுக்கொள்வோம்.

# இரட்டைத்தலை நாய்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன், தனக்கு நெருக்கமாக நீட்டிக் கொண்டிருந்த பெரிய நாயின் காதைக்கூட அது அடிக்கடி கடித்தது. அதே போன்று பெரிய நாயின் தலை பெரிய தோரணையில் நடந்துகொண்டது. இரண்டும் தத்தமது உணர்வுகளுக்குத் தகுந்தபடி வெவ்வேறு விதமாக இயங்கின.

ஆனால், தாகம் பசி போன்றவையெல்லாம் இரண்டுக்கும் ஒரே சமயத்தில்தான் ஏற்பட்டன பாலை வைத்தால் இரண்டு தலைகளும் ஒரே சமயத்தில் நக்கிக் குடித்தன! ஆராய்ச்சிசாலையில் வெப்பம் அதிகமாகிய போது இரண்டுமே ஒரே நேரத்தில் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு மூச்செறிந்தனவாம்!

இப்படி ஒரு கூத்தடித்துவிட்டு, இரண்டும் ஆறுவது நாளன்று 'தலையைப்போட்டுவிட்டன.' இதை விஞ்ஞான ஆராய்ச்சியின் வெற்றி என்று விஞ்ஞானிகள் கொண்டாடுகின்றனர். உயிருள்ள பிராணிகளின் அங்கங்களை அறுத்து ஒட்டவைக்கும் இது அநாகரிகக் கொடுமை என்று ஜீவ காருண்யமுள்ளவர் குரலெழுப்பியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இதைப்பற்றி எழுதியுள்ள 'எம்பெட்டோ பேய்வி' என்னும் அறிஞர்.

ஆதாரம்: "அனிமல் சிடிஸ்." தந்தவர்: வே. வி. வஷ்யம். (தினமணிகதிர்)

# மலர் கொத்து

—ராஜன்—

வாழ்க்கைக்கு அடிப்படையானது எது என்பதுபற்றி அறிஞர்கள் ஆயிரமாயிரம் சொல்லட்டும் கவலையில்லை; நம்பிக்கையில்லையென்றால், வாழ்வில்லை, எதுவுமே இல்லை.

—பாரோ

புருஷன் பேச்சில் மனைவிக்கு எப்போது கவனமிருக்கும்?

பிறபெண்களைப்பற்றி அவன் பேசும்போது!

ஒரு மேடைப் பேச்சாளர் வேகமாகப் பேசிக்கொண்டிருந்தார். "தோழர்களே! நாம் அதிக நெல்லை உற்பத்தி செய்யவேண்டும்" (கூட்டத்தில் ஒருவர் எழுந்து கேட்டார்)

"சரி... வைக்கோலை எப்படி அதிகமாக வளர்ப்பது?"

உடனே பேச்சாளர், "நான் இப்போது மனிதர்களது உணவுப் பிரச்னையைப் பற்றிப் பேசுகிறேன். உங்களது உணவுப் பிரச்னையைப் பற்றி அடுத்துப் பேசுகிறேன்" என்றார்.

வாழ்க்கையென்னும் கொடும் பாலைவனத்திலுள்ள சோலை, வாலிபம்!

—ஷேக்ஸ்பியர்

கள்ளர்களுக்கு உலகம் விழித்திருக்கிறது; காதலர்களுக்கு? ...

—தூங்குகிறது!

போர்னியோவில் சண்டை போடும் முறை விசித்திரமாகவிருக்கும். இரு ஆண்களுக்குள் சண்டை ஏற்பட்டுவிட்டால், உடனே தங்கள் மனைவியரை அழைத்து, அவர்கள் இருவரையும் சண்டை போடச் சொல்வார்களாம். எந்த மனைவி வென்ருளோ, அவள் கணவனும் வெற்றி பெற்றதாகப் பொருள்!

மிருகத்திலிருந்து நம்மைப் பிரிக்கும் பண்புகள் தோன்றும் காலம் வாலிபக் காலமே! அதேபோல் மிருகத்திற்கும் நமக்கும் தொடர்புண்டு என்பதையும் அந்த வாலிபக் காலத்தின் சில எண்ணங்களும் செயல்களும் நிரூபிக்கும்!

கேள்வி: ஓய்வு என்பது என்ன?

பதில்: அதுவும் ஒரு வேலை!

ஃ ஃ ஃ

## பாரதி வாக்கு

தான் குடிக்கும் காப்பிக்காகவும் தான் தின்னும் சோற்றிற்காகவும், தான் உடுக்கும் ஆடைக்காகவும் ஒருவன் தன்னுடைய அருமையான கொள்கைகளைக் கைவிடுவானுல் அவனை மானிடரில் எந்த வகுப்பில் நாம் சேர்க்கலாம்? அவனிலும் பதரான மனிதன் ஒருவனும் இருக்கமுடியாது. அவன் சம்பந்தப்பட்ட மட்டில் கொள்கைக்கும் செய்கைக்கும் வெகுதூரம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## லொறி விற்பனை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. ச. சமாசத்திற்குச் சொந்தமான 28 ஸ்ரீ-3215 பெற்றோல் "பெட்போர்ட்" லொறி விற்பனைக்குண்டு. ஷெ வாகனத்தை சமாசக் காரியாலயத்தில் எந்நேரமும் பார்த்துக் கொள்ளலாம். வாங்க விரும்புவோர் "ரெண்டர்" மூலம் பதிவுத் தபாலில் 15-11-66 க்கு முன் சமாசத் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும். பதிவுத் தபால் உறையின் இடது பக்க மூலையில் "லொறிரெண்டர்" என்பதைக் குறிப்பிடவும்.

நீ. யேம்ஸ்
தலைவர்
பண்டத்தரிப்பு
கோ. ப. நோ. கூ. ச.
சமாசம்,
பண்டத்தரிப்பு.

26-10-66. 1024

## மனேச்சர் தேவை

வற்றுப்பளை கேப்பாபுலவுப் ப. நோ. கூ. சங்கத்திற்கு பின்வரும் தகைமையுடன் ஓர் மனேச்சர் தேவை.

மனுக்கள்: 8-11-66 காலை 10 மணிக்கு முன்னதாக மேற்படி சங்கத்தக்கு வருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

தகைமை:- S. S. C. ஆங்கிலம் கணிதத்தில் திறமையுடன்.

வயது:- 25க்கு மேற்பட்டதாக இருத்தல்வேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சியில் சித்திபெற்றவர் விரும்பத்தக்கது.

பிணை:- ரொக்கம்-1000/-
ஆதனம்:- 2000/-

பிணை கட்டியபின் தான் வேலைக்கு அமர்த்தப்படும்.

சி. சின்னையா
தலைவர்

1350

## வேல் சினிமா

(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
2ம் ஜனத்திரள் வாரம்
எம். ஜி- ஆர். — சரோஜாதேவி
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**

## ராஜா

(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**DAY DREAM**
(ADULTS ONLY)

## நியூ காலிங்கன்

(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
**பார் மகளே பார்**

## மகாத்மா தியேட்டர்

(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**

## 5வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொட்டாஞ்சேனை)
விஜிதா (தெமட்டகொட) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
**பணம் படைத்தவன்**

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம். வெள்ளி

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் பூலோகநாயகி, கௌசலாதேவி சகோதரிகளின் இசை அரங்கேற்றம் இன்று மாலை 6-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

திருவாளர்கள் ச. தம்பையா, கி. பி. ஹரன், எஸ். கி. மாணிக்கவாசகர் உட்பட பலர் சிறப்புரை வழங்குவார்கள்.

## இன்று திருமூலர் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

தொல்புரம் வழுக்கம்பரை அம்மன் கோயில் மண்டபத்தில் இன்று காலை சைவ சித்தாந்த சங்கத்தினர் திருமூலர் முனிவர் குரு பூசையைக் கொண்டாடுகின்றார். திரு. கே. பி. ஹரன் உரை நிகழ்துவார். அம்பாள் பூசை தரிசனம், திருமூலர் நாயனார் புராணம் படித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## பழுதடைந்த தபாற்பெட்டி

மன்னார், வியா

மன்னார் பனங்கட்டிக் கொட்டு வட்டாரத்தில் உள்ள தபாற்பெட்டி கடந்த சூறாவளியின்போது மரம் விழுந்து சேதமுற்றநிலையில் இன்றும் காணப்படுகிறது. இரண்டு வருடகாலமாகியும் இந்த தபாற்பெட்டி திருத்தஞ்செய்யப்படவில்லை.




## கொழும்பு

வெள்ளி 28 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 திருப்பாடல்கள், 7-30 குரல்வளை, 7.40 பௌத்த நற்சிந்தனை. 7-45 பண்ணுருத்தமிழ்-குமாரசாமி ரத்தினகோபால், 8-15 ஞானாமிர்தம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 முத்திநெறி-சைவ சஞ்சிகை, 9-00 முஸ்லிம்சமயப்பாடசாலை, 9-30 மெல்லிசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-00 இந்திரகானம், 1-00 கர்நாடக இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 4-30 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-00 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோவிலிலிருந்து பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் அஞ்சல்.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 முத்திநெறி சைவ சஞ்சிகை, 7-15 நாட்டுஎன் கந்தசாமி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்தஇசை, 10-00 நேயர்விருப்பம்.

## REGAL—JAFFNA

NOW SHOWING
ROGER BROWNE
SCILLA GABEL
SEVEN SLAVES
AGAINST ROME

# வரி விளம்பரம்

## தேவை

நெசவாளர்:

வேலணையில் இயங்கிக் கொண்டிருக்கும் நெசவு நிலையத்திற்கு பெண் நெசவாளர் தேவை. விடுதிவசதியுண்டு. விண்ணப்பிக்கவும். சாரிகளுக்குக்குஞ்சம் இணைத்துக் கொடுப்பவர்கள் குமுத ஸ்சாறிலேக்ஸ், 24/1, பெரியகடை, யாழ்ப்பாணம்

1448

உதவி ஆட்கள்

யாழ்ப்பாணம் பிரபல டாக்டருடன் வேலை செய்ய ஆட்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். பிணைப்பணம் தேவை. அபரிக்கட்டு: S. பொன்னம்பலம் (டாக்டர்), இல. 12, டேவிட் ரோட், யாழ்ப்பாணம்.

1145

## பயிற்சி

மோட்டார் வண்டி ஓட்டும் பயிற்சி:

உங்கள் வாகனத்தில் அல்லது எங்கள் வாகனங்களில் மோட்டார் வண்டிகள் ஒட்டும் பயிற்சி சிறந்தமுறையில் குறைந்த சலாரில் கச்சேரிக்குகாமை யிலிருக்கும் புறாடன்ற் மாஸ்டர் லேணர்ஸ் ஸ்தாபனத்தாரால் கொடுக்கப்படும். 62, கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7229. 1454

## விற்பனைக்கு

சேலைகள்:

சொந்த தறியில் நெசவு செய்த கைத்தறி சேலைகள் 100, 120-ம் நம்பர் சேலைகளும் சருகை போட்ட சேலைகளும் வேட்டி சால்வைகளும் மலிவான விலையில் விற்கப்படும். 17 சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

1449

கோழிக்குஞ்சுகள்:

ஒரு நாள் குஞ்சுகள் — ஒரு கிழமைக் குஞ்சுகள் - ஒரு மாசக் குஞ்சுகள் - மூன்று மாசக் குஞ்சுகள் - முற்பணம் வேண்டியதில்லை. தபால் மூலம் பதிவு செய்து கொள்ளவும். அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி.

1422

## தேவை

நெசவாளர்கள்

5 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை. திருமதி ச. வைரமுத்து, சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

1458

தென் ஆபிரிக்க இன ஒதுக்கல்

## ஐ நா நடவடிக்கை எடுக்கும்

ஐ. நா. (நியூயோர்க்) அக். 27

தென் ஆபிரிக்காவிலும் அதனை ஒட்டிய பிராந்தியங்களிலும் இன ஒதுக்கலை அகற்றுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென பந்தோபஸ்துசபையை வற்புறுத்தும் தீர்மானத்தை ஐ. நா. மகாசபை அங்கீகரித்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக எண்பத்தைந்து நாடுகள் வாக்களித்தன. இரு நாடுகள் மட்டும் எதிர்த்து வாக்களித்தன. பதினேழு நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

## எதிரிக்கு 9 மாத கடுழியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காரவிபத்துவழக்கில்எதிரிக்கு 9மாத கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்டநீதிமன்றத்தில் திரு என். எம் ஜே ராஜேந்திரம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், 1964ம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி காங்கேசன்துறை வீதியில் கவலையீனமாகக் காரை செலுத்தி கிராஸ்வீதியைச்சேர்ந்த க சுப்பிரமணியம்என்பவர், முத்துக்குமாரு பாக்கியநாதனின் மரணத்தை விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. என். சண்முகநாதன் புறக்டர் வி. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

உ
திருச்சிற்றம்பலம்

## ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

திருவருள் முன்னிற்க. 27-10-66 வியாழக்கிழமை காலை (8-8.24) சுபநேரத்தில் உங்கள் ஆதரவு துணையாக திவுப்பகுதிப் பிரசித்த நொத்தாரிஸ் பணியை ஆரம்பித்திருக்கிறேன்.

"கலாபதி", தங்கள் உண்மையுள்ள
சரவணை-வேலணை, வி. சேதுகாவலர்.
27-10-66. 1027

## T.K. அமிர்தா ஜீரணசக்திலேகியம்

மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்படவேண்டும். அது இல்லாதிருக்குமானால், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ணரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு முதலிய நோய்களுக்குப்பலன் கொடுக்கும் சிறந்தமருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்.

குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம் செய்யும்.

**அமிர்தா ஜீரண சக்தி லேகியம்**

சிறியபுட்டிஒன்றுக்கு ரூ. 3-00, பெரியபுட்டி ஒன்றுக்கு ரூ 5-50
தபால் செலவு வேறு.

விபரங்களுக்கு:

செல்லராஜா அன்கோ
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல இலக்கியம் எங்கிருந்து வந்தாலும் வரவேற்கவேண்டும்

## இரசிகமணி கனகசெந்திநாதன் கூறுகிறர்

யாழ்ப்பாணம், சனி

''நல்ல தமிழ் இலக்கியங்கள் எந்த நாட்டைச் சார்ந்ததானாலும் வரவேற்கப்படவேண்டும். நச்சு இலக்கியங்கள், நம் நாட்டைச் சேர்ந்ததானாலும் நாம் அதை ஒதுக்கவே வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் நூல்கள்பற்றி நம் எழுத்தாளர்கள் பேசுவதைப்பற்றித் தவறான அபிப்பிராயம் நிலவுகிறது. நாம் ஆகாசம் நிறைந்ததும், இலட்சியப் போக்கற்றதுமான இலக்கியங்கள் தடை செய்யப்படவேண்டுமென்று கூறவில்லை. மேதமிர, எமது கலாச்சாரப் பரிவர்த்தனையை விருத்தி செய்யக்கூடிய இலக்கியங்களைப்பற்றிக் கூறவில்லை.''

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாண மாநகரசபை பொழுதுபோக்குச் சங்க அறையில் நடைபெற்ற சிறுகதை அரங்கத்துக்குத் தலைமைதாங்கிய இரசிகமணி கனக செந்திநாதன் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இன்று இலங்கை எழுத்தாளர்களின் நூல்களுக்கு நல்ல மவுசு ஏற்பட்டிருக்கின்றது. உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சி. மாணிக்கவாசகர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அண்மையில் கரவெட்டி பட்டின சங்கத்தினர் 1000 ரூபாவரை பெறுமதியான இலங்கைப் புத்தகங்களை வாங்கியதை யாம் அறிவோம்.

இத்தகைய நல்ல சூழ்நிலை உருவாவதற்கு யாழ். இலக்கிய வட்டம் செய்துவரும் சேவை முக்கியமானதாகும். நாம் நமது சிருஷ்டிகளைத் தூய்மையான வைகளாக ஆக்க முற்படவேண்டும்.

சிறுகதை அரங்கில் எழுத்தாளர்கள் அ. செ. முருகானந்தன், சு. வேலுப்பிள்ளை, சு. இராசநாயகன், இ. நாகராஜன், சிற்பி ஆகியவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். இலக்கிய வட்டத்தின் வளர்ச்சியைக் கருதி நண்பர்கள் சார்பில் திரு. க. கணேசலிங்கம், யாழ். இலக்கியவட்ட செயலாளர் திரு. யாழ்வாணனிடம் பரிசுப் பொருட்களைக் கொடுத்தார்.

திரு. கணேசலிங்கம் பரிசளித்த பின்னர் பேசுகையில், யாழ். இலக்கிய வட்டம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு செய்துவரும் சேவை அளப்பரியதென்றும், இரசிகமணி கனக செந்திநாதன், யாழ்வாணன் ஆகியோரின் பணி பாராட்டவேண்டியதென்றும் கூறினர்.

திருவாளர்கள்: புதுதொளி, யாழ்வாணன், செம்பியன் செல்வன் ஆகியோரும் பேசினர்.

# தாய்மொழியே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கள் இங்கு உண்டா? நவீன விவசாய முறை உண்டா? ஆதலால் இன்றைய கல்விமுறையை முற்றாக மாற்ற முடிவுசெய்யக்கூடாது.

தரம் பிரிப்பதானால் மீண்டும் சாதிவேற்றுமை வளரும். குறிப்பாக தமிழ்ப்பகுதியைப் பொறுத்தவரை, பரம்பரை தொழிலுக்கு இது உடந்தையாக அமைந்துவிடும். பாடசாலைகளை வெவ்வேறாகப் பிரிப்பதால், சமூக ஏற்றத்தாழ்வு மீண்டும்தலைதூக்கிவிடும். கிராமப் பாடசாலைகளுக்கும், ஏழை மாணவருக்கும் தரம் பிரிப்பது பாதகமாக முடியும். பாடசாலைகளை தரம் பிரிக்காமல், ஒரே பாடசாலையில் எல்லா கல்வியும் கற்க வசதி செய்யவேண்டும்.

# பன்றிக்கு பால்கொடுக்கும் நாய்!

மன்னார், சனி

மன்னார் பட்டினவீதிகளில் நாய்களும் பன்றிகளும் ஒன்றாகக் கூடித்திரிகின்றன. ஒன்றாகக்கூடிப் படுத்துறங்குகின்றன. அதுமட்டுமல்லபன்றிக்குட்டிகளுக்கு நாய் பால் கொடுத்து காப்பாற்றுகின்றது. இந்த அதிசயத்தை மன்னார் மக்கள் தினசரி காணக்கூடியதாக இருக்கிறது.

# சிறுவனைக் கடத்தினர்களாம்

## விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வியா

நவாலியைச் சேர்ந்தவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்பலம், கணபதி அப்புக்குட்டி, செல்லத்துரை சின்னத்தம்பி ஆகிய மூவரும் சென்ற வருடம் நவம்பர் மாதம் 11-ந்திகதி சுன்னாகத்தைச் சேர்ந்த அப்புக்குட்டி பவளத்தின் ஸ்ரீகாந்தன் என்னும் 7 வயதுச் சிறுவனைத் தாயாரின் பாதுகாப்பிலிருந்து பலாத்காரமாகக் கடத்தியதாகவும் பவளத்தின் மீது பலாத்காரம் புரிந்ததாகவும், கையால் தாக்கிப் பவளத்திற்குக் காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டிச் சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்பொழுது முன்னர் சுப்பிரீம் கோர்ட் குழந்தை ஸ்ரீகாந்தன் சம்பந்தமாக அளித்த தீர்ப்பு அமுலில் இருக்கிறதா இல்லையா என்பதனையிட்டு இரு தரப்பு வழக்கறிஞர்களும் வாதப் பிரதிவாதங்கள் நடத்தினர்.

நீதிபதிமேல்விசாரணையை ஒத்தி வைத்தார். சுன்னாகம் பொலிசார் உதவியுடன் வழக்கறிஞர் எஸ். ஸ்ரீதரன் வழக்கை நடத்தினர். எதிரி

# புதிய மின்சார சபை

கொழும்பு, வியா

இலங்கையிலுள்ள மின்சக்தி அபிவிருத்தி செலவு ஆகியன பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட 8 அங்கத்தவர்களைக்கொண்ட கோஸ்வாமி குழுவினர், அரசாங்க மின்சார இலாகாவுக்கு பதிலாக 'இலங்கைத் தேசிய மின்சார சபை' என்ற சுயாதீன நிறுவனத்தை ஏற்படுத்த சட்டமியற்றுமாறு ஆலோசனை தெரிவித்துள்ளது.

# மலேசிய எதிர்க் கட்சியினர் 70 பேர் கைது

கோலாலம்பூர், அக்.27

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் மலேசிய விஜயத்தின்போது ஆர்ப்பாட்டம் செய்வதெனத் திட்டமிட்டதாகக் கூறப்படும் மலேசியஎதிர்க்கட்சி அங்கத்தவர் 70 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது.

கள் சார்பில்திரு. எஸ் ஸ்கதிரவேலு திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோர் ஆஜரானுர்கள்.

# அரசியல் நெருக்கடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் சிங்களத்தைப் போதனாமொழியாக ஏற்று, சிங்களத்தைப் படித்தால், அடுத்த சந்ததிக்குஇலங்கையில் தமிழினம் இருக்காது. போதனா மொழியைப் பெற்றோர் தெரிவுசெய்ய அனுமதித்தால் தமிழினம் இங்கு பூண்டோடு அழிந்துவிடும். தமிழ்மொழியையும் தமிழினத்தையும் இந்நாட்டிலிருந்து முற்றாக அழிப்பதற்காகவே, போதனாமொழியைப் பெற்றோர் தெரிவு செய்யலாமென்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## இரண்டு ஆபத்து


போதனாமொழியை பெற்றோர் தெரிவுசெய்வதால் இரு ஆபத்துகளுண்டு. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் கடந்த பத்து வருடங்களாக மூடப்பட்டு வந்தன. பல தமிழ்ப்பாடசாலைகள் தரம் குறைக்கப்பட்டன. கோட்டை கிறிஸ்தவக்கல்லூரியில் 60 சதவீத தமிழ் மாணவர்கள் இருந்தனர். நுவரெலியா செ. ஜோன்ஸ்கல்லூரியில் 50 சதவீத தமிழ் மாணவர்கள் இருந்தனர். இன்று இவ்விரு கல்லூரிகளும் தனிச் சிங்களப் பாடசாலைகளாக மாறிவிட்டன. அங்குள்ள தமிழ்ப்பிள்ளைகள், ஒரு சிறிய கட்டிடத்திற்கு நுவரெலியா மகாவித்தியாலயமெனப் பெயர் சூட்டப்பட்டு, விஞ்ஞான வசதிகள் எதுவுமின்றிப் படித்துவருகிறார்கள். தலவாக்கொல்லையில் 900 தமிழ் மாணவருக்குச் சிறிய கட்டடம்; 300 சிங்கள மாணவருக்குப் பெரிய கட்டடம். இந்நிலையில் விஞ்ஞானக்கல்வி பெறலாமென்பதற்காகச் சில தமிழ்ப்பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சிங்களப் பாடசாலைகளுக்கு அனுப்பக்கூடும். இதனால் தமிழ்ப் பாடசாலைகள் மூடுவிழா தொடர்ந்து நடைபெறும்.

# ஐவர்மீது வழக்கு

மாவிட்டபுரம், சனி

தெல்லிப்பழையைச்சேர்ந்தவர்களான சின்னத்தம்பி செல்லையா, செல்லையா ஜெயரத்தினம், செல்லையா நல்லம்மா, செல்லையா அக்கணஸ்ஜெயம், துரைச்சாமி ஞானவதி ஆகிய ஐவரும் சென்ற நவம்பர் மாதம் 27-ம் திகதி அதே இடத்தைச்சேர்ந்த பாலசிங்கம் அற்புதம்மேல் 'அசிட்' வீசி அவரைக்கொலைசெய்ய முயன்றதாகவும் அதே நேரம் மாதனி பாலசிங்கம் மேல் 'அசிட்' வீசி அவருக்குக்காயம் விளைவித்ததாகவும் அதேசமயம் கையாலும் பொல்லாலும் பாலசிங்கத்தைத்தாக்கி அவருக்குக் காயம் விளைவித்ததாகவும் மூன்று குற்றங்கள் சாட்டி சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நித்சிங்கா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. மாஜிஸ்திரேட் எதிரிகளுக்கு குற்றச்சாட்டை வாசித்துக் காட்டியபின் வழக்கை விசாரணைக்காக அடுத்த மாதம் 15-ம் திகதி வரை ஒத்திவைத்தார். முதலாம் எதிரியை 750 ரூபா பிணையிலும் மற்ற எதிரிகளை தலா 200 ரூபா பிணையிலும் செல்லும்படி உத்தரவிட்டார்.

1951ம் ஆண்டு, சமஅந்தஸ்து இந்நாட்டில் இருந்தபோது தமிழர் சிங்களத்தையும் படித்தனர். அதனால் எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. அது தமிழருக்கு உதவியாக இருந்தது. ஆனால் இன்று தனிச்சிங்கள அமுல் நடக்கிறது. அரசாங்க உத்தியோக உயர்ச்சிக்குச் சிங்களம் தேவைப்படுகிறது. இந்நிலையில் தமிழர் சிங்களம் படிப்பது தமிழினம் இறக்க ஆபத்தாகமுடியும். தாய்மொழி தான் போதனாமொழியாக இருக்க வேண்டும்.


மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது. இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர். மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம். இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org